Registered No. M-4483

Madras War Review (TAMIL) 17-3-1944

யுத்த சஞ்சிகை

மலர் IV

1944-ம்௵ மார்ச்சு௴ 17௳, வெள்ளிக்கிழமை

இதழ் 28

அடுத்த வருஷத்தில் நாம் வென்றே தீருவோம்

ஜெனரல் மண்ட்காமரி.

இரண்டாம் போர் முனை ஏற்கெனவே ஆரம்பமாகி விட்டது. அடுத்த வருஷம் நாம் வென்றே தீருவோம்.

இந்த வெற்றிக் குரிய தேதி, என்றைக்கு வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். அன்று வெற்றி கிடைப்பது நிச்சய மென்று நீங்கள் பந்தயம் வேண்டு மானாலும் கட்டலாம். போர் முனையிலுள்ளவர்களும் உள் நாட்டிலுள்ளவர்களும் உண்மையிலேயே பூரண முயற்சி செய்வார்களானால், போராட்டத்தை இந்த வருஷத்திலேயே முடித்து, எதிரிகளை ஸ்தம்பிக்கச் செய்து, அடுத்த வருஷம் கட்டாயம் வென்று விடக்கூடு மென்பது பற்றி எனக்குக் கொஞ்சங் கூடச் சந்தேகமே கிடையாது. இந்த வருஷக் கடைசியிலாவது, அதற்கு முன்னதாகவாவது இந்தப் போராட்டத்தில் வெற்றி யடையத் தக்க நிலைமையில் நாம் இருப்போம்.

ஜெனரல் மண்ட்காமரி, தொழிலாளர் கூட்டத்தில் மார்ச்சு மாதம் 11-ம் தேதி கூறியது.

பொருளடக்கம்.

	பக்கம்.		பக்கம்.
முகப்புப் படம் : ஜெனரல் மண்ட்காமரி ..	1	பணத்தைச் சேமிக்க வேண்டியது ஏன்? ..	5
"அடுத்த வருஷத்தில் நாம் வென்றே தீருவோம்"	1	வானொலி நாட் குறிப்பு	6
முரசொலி	2	காலம் மாறுகிறது	7
தலையங்கம் : ரஷ்யாவுக்கு வெற்றிமேல் வெற்றி.	3	மாணவரும் யுத்த முயற்சிகளும்	9
சொற்ப சேமிப்புத் திட்டம் : கவர்னர் வேண்டுகோள்	4	விளம்பரம் : எச். பி. பி.	11
போர் முனை நிகழ்ச்சி விளக்கம்	4	யுத்த நாட் குறிப்புக்கள்	12

முரசொலி

"கடுமையான எதிர்ப்புப் போராட்டத்தை நேச நாடுகள் ஆரம்பிக்கப் போகின்றன. இதற்கு முன்பு நடை பெற்ற தாக்குதல் போராட்டங்களைவிட, இது மகா கடுமையானதா யிருக்கும். இது வரை எந்தப் போராட்டத்திலும் எந்தப் படையினரும் நடத்தியிராத அளவுக்கு, நேச நாடுகளின் மூவகைப் படைகளும் ஒற்றுமையுடன் முன்னேற முடிந்ததற்குக் காரணம், மனமொத்த கூட்டுறவு தான். இப் போது திட்டமிடப்படும் தாக்குதல் போராட்டம் ஆரம்பமானால், இந்தக் கூட்டுத் தாக்குதல் கூட, மிகவும் அற்பமானதாகத் தான் தோன்றுமென்று நான் உங்களுக்கு உறுதி கூறும் போது, இராணுவ இரகசி யங்களை வெளியிட்டவனாக மாட்டேன்."

—கர்னல் ப்ராங் நாக்ஸ்,
அமெரிக்கக் கப்பற் படை மந்திரி, மார்ச்சு மாதம் 9-ம் தேதி, வாஷிங்டனில் கூறியது.

* * * *

"நமது விமானப் படை ஜெர்மனியர்களை ஒடுக்கிக் கொண்டிருக்கிறது; நாம் இன்னும் எவ்வளவோ செய்ய வேண்டி யிருக்கிறது. இந்த யுத்தத்தை வெல்ல முடியும்; வெல்லவும் செய்வோம். ஆனால் நாம் ஒவ்வொருவரும் நம் கடமையைச் செய்ய வேண்டும். தரைப் போரில் வெற்றி பெறுவது சிறு படைத் தலைமையைக் கொண்டு தான். அதுவும், ஜெர்மனி அடியோடு நசுங்கு முன்னதாகவே வெல்லப்பட வேண்டும்."

—ஜெனரல் அய்சினோவர்,
நேச நாட்டுத் தாக்குதல் படைத் தலைவர், சான்ட் ஹர்ஸ்டில் மார்ச்சு மாதம் 11-ம் தேதி கூறியது.

* * * *

"நமக்கு ஒரு பொது எதிரியுண்டு; ஆகவே, பொது நோக்கமும் உண்டு. நமது உள் நாட்டிலேயே நாம் போராடினாலல்லது ஜெர்மன் கொடுங்கோலர்களை அழிக்க முடியாதென்று நமக்குத் தெரியும். அது ஒரு கடுமையான போராட்டமென்றும் நமக்குத் தெரியும். என்றாலும் நாம் கட்டாயம் வெற்றி பெறுவோம்."

—டாக்டர் பினேஷ்,
செக்கோஸ்லோவாகியத் தலைவர், லண்டனில் மார்ச்சு மாதம் 11-ம் தேதி கூறியது.

* * * *

"ஒவ்வொருவரும் பரிபூரணமாக இந்த யுத்தத்தில் ஈடுபட்டாலல்லது நாம் வெல்லக் கூடுமென்று, நான் நினைக்கவில்லை; பரிபூரணமாக ஈடுபட்டால் மட்டுந் தான், இந்த யுத்தத்திற் வெற்றி பெறுவோம். இது பற்றி சந்தேகமே கிடையாது."

—ஜெனரல் சர் பெர்னார்ட் மாண்ட்காமரி,
மார்ச்சு மாதம் 10-ம் தேதி கூறியது.

* * * *

"அமெரிக்காவுக்கு அதன் நேச நாடுகள் திருப்பிக் கொடுக்கும் கடன் குத்தகையின் அளவு உயர்ந்து கொண்டே போகிறது."

—மிஸ்டர் எல். கரௌலி,
அந்நிய நாட்டுப் பொருளாதார நிர்வாகி, மார்ச்சு மாதம் 8-ம் தேதி கூறியது.

* * *

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV | 1944-ம் ௵ மார்ச்சு ௴ 17உ, வெள்ளிக்கிழமை | இதழ் 28

ரஷ்யாவுக்கு வெற்றிமேல் வெற்றி

ஜெனரல் வாடுடினை அறியாத ரஷ்யர்களே கிடையாது என்று சொல்லலாம். இவருடைய புகழொளி உலகெங்கும் வீசுகிறது. சுதந்தர தாகம் கொண்ட அவருடைய உள்ளத்தில், அச்சம் என்பது அறவே யொழிந்தது. தன் படையை வீறு கொண்டு நடத்தி வெற்றிகள் பல பெற்றார். 1941-ம் வருஷத்தில் மாஸ்கோவை முற்றுகையிட்டுக் கொண்டிருந்த ஜெர்மானியரை விரட்டி யடித்த பெருமை ஜெனரல் வாடுடினுக்கே உரியது. 1942-ம் வருஷம் ஸ்டாலின்கிராடில் கடும் போராடி அதை மீட்டவரும் இவர் தான். இவரைத் தன் கண்ணெனவே கருதுகிறார்கள் ரஷ்யர்கள். இவர் இப்போது நோயாகி விட்டார். ஆகவே, இவருடைய பதவியை மார்ஷல் ஷுகோப் ஏற்றுக்கொண்டிருக்கிறார். திடீர் தாக்குதலில் ரஷ்யர்கள் திறமை வாய்ந்தவர்களல்லவா ? சென்ற வாரம் லெனின்கிராட் போர் முனையில் தம் போராட்டத்தைச் சற்று தளர்த்தினார்கள். தெற்கு நோக்கிச் சென்றார்கள். அங்கே லோ-ஒடெசா ரயில்வே வழியாக மத்திய ஐரோப்பாவிற்கு பான் மான்ஸ்டீன் படைகள் தப்பிப் போகாதபடி அழிக்க முற்பட்டார்கள். மார்ஷல் ஷுகோபின் முதல் உக்ரேனியப் படை, ஷெபிடோப்காவிலிருந்து கிளம்பியது. தெற்கே போய் டார்னபோலுக்கும் ப்ருஸ்கரோபுக்கும் இடையேயுள்ள ரயில்வேயைக் கைப்பற்றியது. இது 1939-ம் வருஷத்திய போலந்து எல்லைப் புரத்திலிருக்கிறது. இதோடு இந்தப் படை நிற்கவில்லை. மேலும் தெற்கே போனது. ப்ரொஸ்குரோபுக்கும் டார்னபோலுக்கும் இடையே ஒரு மாலை போட்டது போல ஒரு வளைவு இருக்கிறது. இது ஒரு கேந்திர ஸ்தானம். இதை ஜெர்மானியர்கள் பலப்படுத்திக் கொள்ள ஒட்டாதபடித் தான் அந்தப் படை மேலும் தெற்கே போனது. லோ-ஒடெசா ரயில்வே வழியாக மட்டுமன்றி, வேறெந்தச் சிறிய ரயில்வே வழியாகவும் ஜெர்மன் படைகள் தப்பி ஓடிவிடக்கூடாது என்பதற்காகத் தான் இவ்வளவு விரைவாக, செம்படைகள் தெற்கு நோக்கி முன்னேறிக் கொண்டு வருகின்றன.

ஷெபிடோப்காவி லிருந்து இரண்டு படைகள் கிளம்பின. ஒன்று, ஸ்ப்ரூச் பள்ளத்தாக்கு வழியாகவும், மற்றொன்று, சேரத் பள்ளத்தாக்கு வழியாகவும் புறப்பட்டன. இந்த இரண்டாவது படை, டார்னபோலைக் கடந்து சென்றது. தன் படை செல்ல வேண்டிய பாதையை ஜெனரல் ஷுகோப் மிகக் கெட்டிக்காரத் தனமாக வகுத்தார். டார்னபோலை இந்தப் படைகள் கடக்கு முன்னதாக, பக் ஆற்றை இலகுவில் கடக்கக்கூடிய வட திசையிலே தான், கடந்தன. இதற்குத் தெற்கே தான் பான் மான்ஸ்டீனுடைய பலமான அரண்கள் அமைந்திருந்தன. இந்தப் படை ரெயில்வேயை யடைந்தவுடன் ஒரு விசிறியைப் போல் பிரிந்து பரவின. இதில் ஒரு பகுதி, லோவை நோக்கிப் போனது. மற்றொன்று ஷ்மெரிங்காவை நோக்கிப் போனது. ஷ்மெரிங்கா ஒரு முக்கியமான ரயில்வே ஜங்ஷன். வின்னிட்சாவுக்கும் உமானுக்கும் இடையேயுள்ள பான் மான்ஸ்டீனின் அரண்களுக்கு இது ஆதாரமா யிருக்கிறது. வின்னிட்சாவும் உமானும் சில நாட்களுக்கு முன்பு ரஷ்யர்கள் வசமாயின என்பது இங்கே குறிப்பிடத் தக்கது. கிழக்கே யிருந்து ஜெனரல் ரோனியோப் தலைமையில் செம்படைகள் முன்னேறி வந்து கொண்டிருக்கின்றன. இந்தப் படைகளால் ஷ்மெரிங்காவுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

இனி டினீப்பர் ஆற்றின் கீழக் கோடியில் நடைபெறும் போராட்டத்தைக் குறித்து ஒரு சிறிது கவனிப்போம். இங்கேயும் தம் திடீர் தாக்குதல் முறையைத் தான் கையாண்டார்கள். இங்கு லெட்ஸ் ஆற்றிற்கும் டினீப்பர் ஆற்றிற்கும் இடையே அமைந்துள்ள முக்கோணத்தின் ஒரு மூலையில், ஜெர்மன் படைகளை விரட்டினார்கள் அங்கே மூலையிலேயே ஜெர்மன் படைகளை நசுக்காமல், மேற்கு நோக்கி, க்ரிவாய் ராக்குக்குத் தென் புரத்திற்குப் போனார்கள். இங்கு லெட்ஸ் ஆற்றையும் இங்குல் ஆற்றையும் பல விடங்களில் கடந்தார்கள். நிக்கோலெயேப்புக்கும் ஸ்னமெங்காவுக்கும் இடையேயுள்ள ரயில் பாதையை வெட்டி விட்டார்கள். இப்படிச் செய்வது இரண்டு நோக்கங்களோடாகும். முதலாவதாக, கருங்கடலின் வடகரையில் உள்ள நிகொலெமேய்-கெர்சான் பகுதியிலுள்ள ஜெர்மன் படைகளின் நிலைமை இதனால் ஆபத்திற் குள்ளாகிறது. இரண்டாவதாக, வின்னிட்சாவுக்கும் உமானுக்கும் இடையிலுள்ள பான் மான்ஸ்டீனுடைய படைகளைக் கிழக்கிலிருந்து தாக்க இடமேற்படும். வடக்கே யிருந்து செம்படைகள் நிக்கொலேயேவை அணுகிக் கொண்டிருக்கின்றன. அதே சமயத்தில், டினீப்பருக்கு மேற்கேயுள்ள பெரிஸ்லாப் என்னும் பட்டணத்தை ரஷ்யப் படைகள் கைப்பற்றிவிட்டன. இது கெர்சானுக்கு வடமேற்கே 40 மைல் தூரத்திலிருக்கிறது. இனி ரஷ்யாவை விட்டு ஜெர்மன் படைகள் ருமேனியாவுக்கு ஓட்டமெடுக்கக் கூடிய நிலைமை ஏற்படக் கூடும்.

சொற்ப சேமிப்புத் திட்டம்

கவர்னர் வேண்டுகோள்

மேன்மை தங்கிய சர் ஆர்தர் ஹோப்.

கவர்னர் மாளிகை,
கிண்டி, 10 மார்ச்சு 1944

சொற்ப சேமிப்புத் திட்டத்தை மேற் கொள்ளும்படி சென்னை மாகாண மக்களுக்கு மகிழ்ச்சியுடன் நான் சிபார்சு செய்கிறேன். இதை இந்தியா அரசாங்கத்தார் வகுத்துள்ளார்கள். இந்த மாகாணத்திலும் பிற மாகாணங்களிலும் இது இப்போது நடை முறைக்கு வருகிறது.

தேசிய நோக்கத் தோடு நாம் இதைப் பார்ப்போமானால், இந்தத் திட்டம் பெரும் மதிப்பிற்குரிய தென்றும், முக்கியமான தென்றும் தெரியும். அடிப்படையாக இது யுத்தங் காரணமாக ஏற்பட்டதல்ல. ஆனால், நாட்டின் முன்னேற்றத்தை முன்னிட்டே அமைக்கப்பட்டது. இந்த முன்னேற்றம் யுத்த காலத்தில் மட்டு மல்ல; எதிர் காலத்தில் பல வருஷங்களுக்காகவுந் தான். இந்தியாவுக்குச் சிறந்த தோர் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. இதில் பணத்தைச் சேமித்துப் பெரும் நிதி திரட்டலாம். அப்போது தான் உலகிலுள்ள பல பெரும் நாடுகளெல்லாம் கூடிப் பேசும் போது, அதில் கலந்து பேசவோ, தன் செல்வாக்கை உபயோகிக்கவோ முடியும்.

தனிப் பட்டவர்களின் நோக்கத்தைக் கொண்டு பார்ப்போமானால், இதை விட மேலான ஜாமீன் கிடைப்பது கஷ்டமென்றும், தாம் போட்டதை விட அதிகத் தொகை நிச்சயமாகக் கிடைக்கு மென்ற உறுதி யுண்டென்றும் விளங்கும். இந்தச் சொற்ப சேமிப்புத் திட்டத்தில் பூரணமாகக் கலந்து கொள்ள வேண்டு மென்று, இம் மாகாண மக்களை நம்பிக்கையுடன் வேண்டிக் கொள்ளுகிறேன். ஏனென்றால், அப்படிக் கலந்து கொள்ளுவதனால், அவர்கள், தம் நாட்டிற்கும் தமக்கும் அளவிட முடியாத நன்மைகள் செய்தவர்களாவார்கள்.

(ஒப்பம்) **ஆர்தர் ஹோப்,**
சென்னை கவர்னர்.

(மொழி பெயர்ப்பு)

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

இந்தியா சட்ட சபையில் வரவு செலவுத் திட்டத்தைக் குறித்து குறை கூறப் பட்ட வற்றிற்கெல்லாம், இந்திய அரசாங்க நிதி மந்திரி கனம் சர் ஜெரிமி ரெய்ஸ்மான் மார்ச்சு மாதம் 7-ம் தேதி விடையளித்தார். விமானக் கூடங்கள் சம்பந்தமாகச் சென்ற வருஷத்தை விட இந்த வருஷம் ஏன் அதிகச் செலவாகும் என்று விளக்கி இருக்கிறார். இந்தியாவின் உள் நாட்டுப் பாதுகாப்பின் பொருட்டுச் சாதாரணமாக என்ன செலவாகுமோ, அதை விட, போராடும படைகளுக்கும் அவற்றின் தேவைப் பொருட்களுக்காகவும் இந்திய நிதியிலிருந்து செலவு செய்யப்படும் தொகை, அதிகமல்ல வென்று வற்புறுத்திப் பேசினார். உதாரணமாக, தென கிழக்காசியப் படைத் தலைமை ஏற்படுத்துவது சம்பந்தமான செலவுகள், இந்தியாவைச் சாராது.

யுத்தச் செலவை இந்தியாவும் பிரிட்டனும் எப்படி பகிர்ந்து கொள்ள வேண்டு மென்பது பற்றி, ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தைக் குறித்தும், நிதி மந்திரி பேசினார். 1943-44-ம் வருஷத்தோடு முடிவடையும் சென்ற 5 வருஷங்களில், இந்தியாவின் பாதுகாப்பின் பொருட்டும் சப்ளை உத்தியோகஸ்தர்களின் பொருட்டும் செலவாகும் மொத்தத் தொகையில் 800 கோடி மட்டுந் தான் இந்திய நிதியினின்று செலவு செய்யப்படுகிறது. சுமார் 940 கோடி ரூபாய் இங்கிலாந்திலுள்ள மன்னர்பிரான் அரசாங்க நிதியினின்று செலவிடப் படுகிறது. இந்த 940 கோடி ரூபாயில், செட்பீல்ட் கமிட்டியார் செலவு செய்ய வேண்டு மென்று சிபார்சு செய்யப்பட்டவற்றை நிறைவேற்றுவதில் இங்கிலாந்தின் பங்குத் தொகையும் சேர்க்கப்பட்டிருக்கின்றது. அவர் மேலும் கூறியதாவது :—

"இந்தியாவின் பேரில் செலவெழுதப்படும் தொகை, இந்தியாவின் பாதுகாப்பின் பொருட்டுச் செலவிடப்படும் தொகை தான் என்பதில் தடையே கிடையாது. அது மட்டு மல்ல. இந்தியாவின் பாதுகாப்பின் பொருட்டுச் செலவிடப்படும் முழுத் தொகையும் இந்தியாவின் பேரில் செலவெழுதப் படுவதில்லை. அதாவது இந்தியாவின் எல்லைப் புரத்திற்கப்பால் நடைபெறும் போராட்டத்தின் பொருட்டுச் செலவு செய்யப்படும் தொகையின் பகுதி கூட, இந்தியாவின் மேல் செலவெழுதப் படுகிறதில்லை. இந்தியப் பாதுகாப்பின் பொருட்டு செலவு செய்யப்படும் முழுத் தொகையும் இந்தியா மீது செலவெழுதப் படுவதில்லை."

இந்தியாவின் 5-வது வருஷ யுத்த வரவு செலவுத் திட்டத்தின் சில புள்ளி விவரங்கள் நமது வாசகர்கள் ரசிக்கத் தக்கவை: பாதுகாப்பின் பொருட்டுச் செலவாகும் மொத்த தொகை 262·64 கோடி ரூபாய். விலை வாசிகளின் பொருட்டு உயர்ந்துள்ள 13·01 கோடி ரூபாயைக் கழித்தாலும், மீதியுள்ளதும் பெருந் தொகை தான். பாதுகாப்புச் செலவுகளில் மற்றொரு முக்கியமான அதிகப்படி இனம் ரூ. 13·030 கோடி. இதனால் இந்தியாவுக்கு நிரந்தரமான நன்மையுண்டு. இந்தப் பாதுகாப்பு முதலீட்டுச் செலவின் விவரங்களாவன :—

விமானக் கூடங்கள்	ரூ. 14·67 கோடி.
கைத் தொழில் விருத்தி	ரூ. 6 "
பரஸ்பர உதவிப் படி விமானக் கூடங்கள்	ரூ. 10·85 "
இந்திய கப்பற் படைக்காகப் புதிய கட்டிடங்கள் ..	ரூ. 2·58 "

(11-ம் பக்கம் பார்க்க)

பணத்தைச் சேமிக்க வேண்டியது ஏன்?

அரசாங்கத்தார் வகுத்துள்ள பல முறைகள்

வெற்றிக்குப் பின் சேமிப்பு

(மிஸ்டர் கே. எம். பாலசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.)

பொதுவாகச் சேமிப்பு என்பதற்குப் பொருள் ஒருவனது க்ஷேமத்திற்காகச் சேர்த்து வைப்பது என்று கொள்வோமேயானால், அது பெரும்பாலும் பொருத்தமானதாகவே இருக்கும் என்று நம்புகிறேன். 'சேமிப்பு' என்ற இவ்வார்த்தை 'க்ஷேமம்' என்ற பதத்திலிருந்து பிறந்துள்ளது என்பது தெளிவு. ஒரு மனிதன் தன் எதிர்கால க்ஷேமத்தை அதாவது சுகவாழ்வை உத்தேசித்துப் பற்பல காரியங்களைச் செய்கிறான். பற்பல பொருள்களைச் சேர்த்து வைக்கிறான். மனிதன் மட்டும் அல்ல; ஜீவ ராசிகள் அனைத்துமே தமது எதிர்கால வாழ்விற் சுகம் அடைவதையே தமது லக்ஷியமாகவும் தொழிலாகவும் கொண்டு உழைக்கின்றன. எறும்பிலிருந்து யானைவரை தன் வாழ்க்கையின் பிற்கால சுகத்திற்குப் பிரயத்தனம் செய்த வண்ணம் இருப்பதை நாம் நன்கு அறிவோம். எனவே, பிற்கால வாழ்க்கையின் க்ஷேமமே வாழ்க்கையின் பிரதான லக்ஷியம். ஆறறிவற்ற பிராணிகளும் அடைவதற்கு முயற்சி செய்யும் இந்த லக்ஷியத்தை அறிவிற் சிறந்த மனிதன் மட்டும் அலக்ஷியம் செய்ய முடியுமா? செய்தாலும் தகுமா?

சேமிப்பு என்றால் என்ன?

'சேமிப்பு' என்பது பொதுவாக உணவுப் பண்டங்களைச் சேர்த்து வைப்பது என்று பொருள்படும். ஆனால் எல்லாவித உணவுப் பொருள்களும் எவ்வளவு நீடித்த காலத்திற்கும் சேமித்து வைக்கக்கூடிய நிலைமையில் இல்லை; அப்படி வைக்க முடிந்தாலும் எல்லோருக்கும் அதற்கேற்ற வசதி ஏற்படுவதும் கஷ்டம். ஆதலால், நீடித்த நாள் சேமித்து வைக்கக் கூடியதும், அப்படி வைப்பதனால் கேடு அடையாததும், அப்படி வைப்பதன் மூலம் பிற்காலத்தில் பிற பொருள்களைப் பெற உதவுவதும் ஆகிய பணத்தை மனிதன் சேமித்து வைக்கிறான். 'காற்றுள்ள போதே தூற்றிக்கொண்டு' காற்றில்லாதபோது கையில் வைத்து உண்பதுதான் அறிவுடைமை என்பதை மனிதன் நன்கு அறிந்துள்ளான். இது சாதாரண சமாதான நாட்களிலேயே நடக்கும் விஷயம்.

யுத்த காலத்தில் சேமிப்பு

சமாதான நாட்களிலேயே சேமிப்பு என்பது மனிதனுக்கு இயற்கையாகவும் இன்றியமையாததாகவும் உண்டு என்றால், சண்டைக் காலத்தில் அதன் அவசியத்தைப் பற்றி நம் கூறாமலே யாவரும் அறிந்து கொள்ள முடியும். சமாதான காலத்தில் ஒருவன் தன்னிடம் தற்காலம் உள்ள பணத்தைப் பிற்காலத்திற்காகச் சேர்த்து வைப்பது, அவனுடைய தனிப்பட்ட அல்லது குடும்பத்தின் நலத்தை மட்டும் மேன்மைப் படுத்தலாம். ஆனால் அதே மனிதன் தன் தேசம் கடும்போர் ஒன்றிற் சிக்கிக் கிடக்கும்போது, தன் சர்க்காரிடம் தன் கையிலுள்ள பணத்தைக் கடனாகக் கொடுத்துச் சேர்த்து வைப்பானேயானால், அதன் மூலம் அவன் தன் தேச மக்கள் அனைவருக்குமே பெருத்த நன்மையையும் மேன்மையையும் செய்தவனாவான். அப்பணத்தைக் கொண்டு, சர்க்கார் ஆயுதம் முதலியவற்றை வாங்கித் தன் எதிரியைப் போரில் தோற்கடிக்க ஏதுவாகிறது. தனது தேசம் அதன் மூலம் நன்மையடைகிறது.

> "தேசியச் சேமிப்புப் பத்திரம் கொள்ளுவோம்.
> நாசியைக் கொன்று தள்ளுவோம்—
> நலமது பெறவே இனி நம்"
> (தே)

சாதாரணச் சேமிப்பு

வெற்றிக்குச் சேமிப்புச் செய்வதைப் பற்றியும் அதன் விபரங்களைப் பற்றியும் கவனிப்பதற்கு முன், சாதாரண சேமிப்பைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். ஜனங்கள் நம் நாட்டில் பணம் சேர்க்கக் கையாளும் முறை பல. அவற்றில், பணத்தைப் பூமியில் புதைத்து வைக்கும் முறை பழங்காலத்திலிருந்து இருந்து வருகிறது. 'பாடு பட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக் கேடு கெட்ட மானிடர்' கையாளும் இம்முறையை இடித்துக் கூறிய பாட்டைப் படித்துப் பாராதவர் யார்? அடுத்தபடியாக 'அட்டாவியிலும் அடுக்குப் பானைகளிலும்' கூடப் பணத்தைச் சேமித்து வைப்பது நம் நாட்டுப் பெண்கள் கையாண்டு வரும் 'கர்னாடக' முறைகளில் ஒன்று. இம்முறையின் கெடுதல்கள் யாவருக்கும் தெரிந்ததே. தன் கையிலுள்ள பணத்தை பிறரிடம் 'கைமாற்றாகவும்' கடன் பத்திரம் மூலமும் வட்டிக்கு விட்டுப் பணத்தைச் சேர்ப்பது மற்றொரு வெகு சாதாரண முறை. இதனால் விளையும் நன்மைகளைக் காட்டிலும் விபரீதங்களே அதிகம் என்பதையும் எல்லோரும் அறிவார்கள்.

ஒரு எச்சரிக்கை

இவை போக, தற்காலத்தில் இந்த யுத்த நெருக்கடியில் நம் நாட்டு மக்கள் மற்றொரு முறையை வெகுவாகக் கையாண்டு வருகிறார்கள் இன்றையத் தினம் யுத்தத்தின் காரணத்தால் அளவு கடந்த பணம் நாட்டில் நடமாடி வருகிறது. யுத்தத்திற்கு முன்பிருந்த பணத்தைக் காட்டிலும் நூறு கோடி ரூபாய்க்கு அதிகமாக, இன்று நம் இந்திய நாட்டில் மட்டும் பணம் கையாளப்பட்டு வருகின்றது. எனவே, வீடு, நிலம், தங்கம் முதலியவைகளுக்கு 'கிராக்கி' அதிகம்; அவற்றின் விலைகள் ஏறி விட்டன. இந்த விலையேற்றம் சாஸ்வதமானது என்று இதை நம்பி தம் கையிலுள்ள பணத்தைப் பல பேர்கள் வீடுகள், நிலங்கள், நகை இவற்றில் கொட்டுகிறார்கள். நாளையத் தினம் திடீரென்று யுத்தம் முடிந்து விடுகிறது. அவர்கள் நிலைமை என்ன வாகும்? இன்று துருப்புகளின் சார்பாக நமது நாட்டில் அதிகப்படியாக நடமாடி வரும் கோடானு கோடி ரூபாய்கள் அன்று திடீரென மறையும்; அதன் காரணமாக மக்கள் எல்லாரிடத்திலும் உள்ள பணமும் குறையும். வீடு, நிலம், தங்கம் இவற்றை வாங்க, ஆளோ, ஆளிருந்தாலும் பணமோ, இல்லாமல் தத்தளிப்பார்கள். நூறு ரூபாய்க்கு இன்று வாங்கப்பட்ட இப் பண்டங்கள், அப்போது பத்து ரூபாய்க்குக் கூட சீந்துவாரின்றி மலிந்துவிடும். அப்போது இன்றைக்கிருக்கும் லக்ஷாதிபதிகள் ஓட்டாண்டிகளாகி விடுவார்கள். ஆதலால், நம் மக்கள் இம்முறையை இப்போது கையாளுதல் மிகவும் அபாயகரமானது என்று எச்சரிக்க விரும்புகிறோம். இவற்றை எல்லாம் விட, மிகச் சிறந்த முறை ஒன்று உள்ளது. அதைக் கைப்பற்றுவது தான் எல்லா விதத்திலும் சிறந்ததாகும்.

அரசாங்கத்திற்குக் கடன் கொடுத்துச் சேமிப்பது

அம்முறை தான் என்ன? அது தான் வெற்றிக்குச் சேமிப்பு என்னும் முறை. நம்மிடம் இருக்கும் பணத்தை, சிக்கனச் செலவிற்குப் போக மிஞ்சிய தொகையை, நமது சர்க்காரிடம் கடனாக கொடுத்துச் சேர்த்து வைப்பது தான் அம் முறை. இம்முறையின் மிகச் சிறந்த பயன், இப் போரை நம் தேசம் வெற்றிகரமாக நடத்த இப்பணம் நம் சர்க்காருக்கு உபயோகப் படுவதேயாகும். மற்றொரு பயன், யுத்தம் முடிந்த பின், நாடெங்கும் பணப் புழக்கம் சுருங்கிப் போய், நலிந்து போன காலத்தில் இப்போது நாம் சர்க்காருக்குக் கடனாகக் கொடுத்துள்ள பணம் வட்டியும் முதலுமாக அட்டியில்லாமல் வந்து சேரும். இதைக் காட்டிலும் சிறந்ததும், உடனுக்குடனே நம் எல்லோருக்கும் நல்ல பயனாக இருப்பதும் மற்றொன்றுள்ளது. இன்று நமது நாட்டில் பணமும் ஜனமும் அதிகம்; பண்டங்கள் குறைவு. இன்றைய இப் பஞ்ச நிலைமைக்குக் காரணம் முக்கியமாக அதிகப்படியான பண நடமாட்டம். இந்தப் பண நடமாட்டம் குறைந்தால், பண்டங்களின் விலையும் குறையும். இந்த அதிகப்படிப் பணத்தை எப்படிக் குறைப்பது? நடமாட்டத்திலிருந்து நகர்த்தி எடுத்து விடுவதன் மூலம் குறைக்கலாம். எப்படி எடுப்பது? சேமிப்பதன் மூலம்.

சேமிப்பதற்குப் பல முறைகள் நாம் மேலே கண்டபடி இருந்தாலும், அவைகளை விடுத்துச் சர்க்காரிடம் கடனாகக் கொடுத்துச் சேமிப்பதன் மூலம், இப்பஞ்சத்தை ஒருவாறு உடனே நிவர்த்திக்கலாம்.

வெற்றிக்குச் சேமிப்பு

இவ்வாறு, மக்கள் தங்களிடம் இருக்கும் பணத்தைச் சர்க்காரிடம் கொடுத்துச் சேமித்து வைப்பதற்காக நமது இந்திய சர்க்கார் பலவிதமான நல்ல திட்டங்களை ஏற்படுத்தியுள்ளார்கள். ஏனைய தேசங்களும் "வெற்றிக் கடன்" என்னும் திட்டத்தைத் தத்தம் தேசங்களில் இன்று கையாண்டு தான் வருகின்றன. இதுவரை, 3 லக்ஷம் கோடி டாலர்கள் யுத்தத்திற்காகச் செலவு செய்துள்ள அமெரிக்க சர்க்காரும், இன்னும் பிரிட்டிஷ் சர்க்காரும் இதுபோன்ற எல்லா நாடுகளும் மக்களிடம் கடன் வாங்கித் தான் பெரும்பாலும் தமது செலவைச் சரிக்கட்டி வருகிறார்கள். ஆஸ்திரேலிய சர்க்கார் இதுவரை தம் மக்களிடம் 27 கோடி பவுன் கடன் வாங்கியுள்ளது இந்த யுத்தத்தின் பொருட்டு. நமது இந்திய சர்க்கார் மொத்தம் 1,641 கோடி ரூபாய் இந்த யுத்தம் தொடங்கியதிலிருந்து செலவழித்துள்ளது. இப்பணத்தையெல்லாம் கூடியவரை மக்களிடம் கடன் வாங்கிச் சரிக்கட்டத் தான் எல்லா சர்க்கார்களும் முயற்சி செய்கின்றன. "இந்த யுத்தத்தை வெகு சீக்கிரமாகவும் வெற்றிகரமாகவும் நாம் முடிக்க வேண்டும் என்றால், அதற்காக நம் மக்கள் தொடர்ந்தும், பெருத்த தொகைகளாகவும் சேமித்து வருவது மிக அவசியமாகும்" என்று பிரிட்டனின் தேசீயச் சேமிப்பு இயக்கத்தின் தலைவர் லார்டு கிங்ஸ்லி பிரபு சமீபத்தில் குறிப்பிட்டது, இந்த 'வெற்றிக்குச் சேமிப்பை'ப் பற்றித் தான் என்பதை நாம் அறியவேண்டும்.

தற்காப்புப் பத்திரங்கள்

இவ்வாறு நம் இந்திய சர்க்கார் ஏற்படுத்தியுள்ள சேமிப்புத் திட்டங்கள் என்ன? முதலாவதாக, பாதுகாப்புப் பத்திரங்கள் என்பது. இதற்குத் தற்காப்புப் பத்திரங்கள் என்றும் பெயர். இவைகளின் மூலம் ஆயிரம், லக்ஷம் போன்ற தொகைகளைச் சர்க்காருக்குக் கடனாகக் கொடுக்கலாம். இத்தொகைக்கு நூற்றுக்கு மூன்று வட்டி. அதனால் இதற்கு 'மூன்று வட்டிக் கடன்கள்' என்றும் ஒரு பெயர் உண்டு. இப் பத்திரங்களை பாங்குகளில் தேவையானபோது அடமானம் வைத்துப் பணம் கடனாகவும் வாங்கலாம். இம்முறை சிறப்பாகப் பணக்காரர்களுக்குத் தான் உரியதாகும்.

தேசீயச் சேமிப்புப் பத்திரங்கள்

இரண்டாவதாக, தேசீயச் சேமிப்புப் பத்திரம் என்பது. இது பணக்காரருக்கும் சாதாரண மக்களுக்கும் ஏறக்குறைய பொதுவானதே. இப் பத்திரங்கள் 10 ரூபாய் விலையிலிருந்து 5,000 ரூபாய் வரையில் உள்ளன. ஒரு தனி மனிதன் இப் பத்திரத்தின் மூலம் 5,000 வரை தான் போடக் கூடும். இன்று பத்து ரூபாய்க்கு ஒரு பத்திரம் வாங்கினால் பன்னிரண்டு வருடம் கடந்து அது ரூபாய் 15 ஆகத் திருப்பி யளிக்கப்படும். இப்போது போடும் பணம், மூன்று வருடத்திற்கு முன் திருப்பி யளிக்கப்பட மாட்டாது. அதன் பின் அத்தொகை அதுவரை சேர்ந்துள்ள வட்டியுடன் எப்பொழுது கேட்டாலும் தரப்படும். இப் பத்திரம் ஒவ்வொரு தபாலாபீசிலும் விற்கப்படுகிறது. அத்துடன் ஒவ்வொரு ஜில்லாவின் கலெக்டரும் பல தக்க மனிதர்களை நியமித்துள்ளார்கள். அவர்கள் மக்களைத் தேடி வருவார்கள். அவர்களிடமே நமது பணத்தைக் கொடுத்து, சிரமமே இல்லாமல் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

சேமிப்பு பாங்கி முறை

மூன்றாவதாக, சேமிப்புப் பாங்கி முறை என்பது. இதுவும் நம் நாட்டில் உள்ள தபாலாபீஸில் தான் செய்ய வேண்டியது. எப்பேர்ப்பட்ட ஏழை மக்களும் இந்த யுத்தத்தை வெற்றி பெற நடத்தத் தம்மாலான சிறு உதவியைச் செய்து, தாமும் பலன் பெறத்தான் நமது சர்க்கார் குறிப்பாக இத் திட்டத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். மேலே குறிப்பிட்ட சர்க்காரால் நியமிக்கப்பட்ட சிலர், இந்தத் திட்டத்தின்படி நாட்டில் உள்ள மக்கள் பலரை அவர்கள் இருக்கும் இடம் தேடியும் வருவார்கள். அவர்களிடம் யாரும் தம் பணத்தைக் கொடுத்துச் சேமித்து வைக்கலாம். இத் திட்டத்தின்படி ஒருவன் 2 ரூபாயிலிருந்து 10,000 ரூபாய் வரை தபாலாபீஸில் சேமித்து வைக்கலாம். இரண்டு ரூபாய்க்குக் குறையாமல் முதலில் போடவேண்டும். அதன் பின் ஒரு முழு ரூபாய்க்குக் குறையாததும், ரூபாயின் அம்சமாகிய சில்லரை யில்லாததுமான தொகையையே போடவேண்டும். இதற்கு வட்டி நூற்றுக்கு 2½ ரூபாய். இப் பணத்தை யுத்தம் தீர்ந்த ஓராண்டுக்கு முன் திருப்பிப் பெற முடியாது. ஆனால், பணம் போட்டவன் நடுவில் திடீரென்று இறந்துவிட்டால், அவனது உறவோர் அத்தொகையைப் பெற முடியும்.

பரிசுப் பத்திரங்கள்

கடைசியாக, மற்றொரு நூதன முறையை நமது இந்திய சர்க்கார் தற்போது ஏற்படுத்தியுள்ளார்கள். இது ஏழை பணக்காரர் யாவருக்கும் வசீகரமானதோர் முறையாகும். 1949-ம் வருஷம் வட்டியற்ற பரிசுப் பாண்டுகள் என்பது இதன் பெயர். இது ஒரு "லாட்டரி" (சீட்டுக் குலுக்கும்) முறையாகும். நம் நாட்டில் இருந்துவரும் 'சீட்டுப் பிடிக்கும்' முறையை இது ஒரு விதத்தில் ஒத்ததாயினும், அதை விடப் பன்மடங்கு பலமான பரிசுகளும் பயனும் தருவதாகும். இவற்றில், 10 ரூபாய்ப் பத்திரம், 100 ரூபாய்ப் பத்திரம் என இருவகை யுண்டு. இவைகள், 1944-வது வருஷம் ஜனவரி மாதம் 15-ம் தேதியிலிருந்து, நம் நாட்டிலுள்ள ரிஸர்வ் பாங்கி, இம்பீரியல் பாங்கியின் கிளை ஆபீஸ்கள் மற்றுமுள்ள கஜானாக்கள் இவைகளில் விற்கப்படும். சாதாரணமாக கையில் உள்ள பணத்தைக் கொண்டு போய் யார் வேண்டுமானாலும் யாதொரு சிரமுமின்றி விலைக்கு வாங்கலாம். இவைகளின் முகப்பில் உள்ள தொகைக்கே இவைகளை 1944-வது வருஷம் ஜனவரி மாதம் 15 ந் தேதியிலிருந்து எப்போதும் நம் சர்க்கார் திருப்பிப் பெற்றுக் கொள்ளும். இக் கடனுக்கு வட்டியில்லை. என்றாலும் இதில் உள்ள மற்றொரு விசேஷம், வட்டியை விடப் பல்லாயிரமடங்கு அதிகக் கவர்ச்சியை மக்களிடம் உண்டு பண்ணுகிறது. அதாவது, 1944 வருடம் ஜனவரி 15 முதல் 1949 வருஷம் ஜனவரி 15 வரை, ஒவ்வொரு வருஷமும் ஜனவரி 15, ஜூலை 15 என்னும் இவ்விரு தேதிகளிலும் முறையே இரண்டு சீட்டுக் குலுக்குதல் சர்க்காரால் நடத்தப்படும். 10 ரூபாய்ப் பத்திரக்காரர்களுக்கு ஒரு தனிக் குலுக்குதலும் 100 ரூபாய்க்காரர்களுக்கு மற்றொன்றுமாக ஒவ்வொரு தேதியிலும் இரண்டு பரிசு முறைகள் உண்டு. இவ்வாறு, 100 ரூபாய் பாண்டுகளின் சார்பில், 50,000 ரூபாய்ப் பரிசு ஒன்று 20,000 ரூபாய்ப் பரிசு ஒன்று, 25,000 ரூபாய்ப் பரிசுகள் இரண்டு ஆக ஒரு லக்ஷ ரூபாய்க்கு 5 பரிசுகள் வழங்கப்படும். இதே போல, 10 ரூபாய்ப் பாண்டுகளின் சார்பில் 2,500 ரூபாய் பரிசு ஒன்று, 1,250 ரூபாய்ப் பரிசுகள் இரண்டு, 500 ரூபாய்ப் பரிசுகள் ஐந்து, 250 ரூபாய்ப் பரிசுகள் பத்து ஆகப் பதினெட்டுப் பரிசுகள் 10,000 ரூபாய்க்கு வழங்கப்படும். அதிர்ஷ்டம் உள்ளவர்கள் பிரைஸ் அடிக்கலாம். அதிர்ஷ்டம் இல்லாதவர்களுக்கும் நஷ்டம் ஒன்றும் இல்லை. ஐந்து வருடம் கழித்துக் கொடுத்த பணம் அப்படியே திருப்பிக் கொடுக்கப்படும். நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் அதிர்ஷ்டத்தைத் தான் கொஞ்சம் அளந்து பாருங்களேன்.

வெற்றி பெறப் பேருதவி

எனவே, உபத்திரவம் இல்லாமை, உறுதியாய்த் திருப்பிப் பெறுதல், பின்னால், பயன், தற்போதும் பஞ்சக் குறைவு இந்தக் குணங்களைக் கொண்ட மேற்கூறிய நான்கு முறைகளில் ஒன்றையோ அனைத்தையுமோ நீங்கள் பின்பற்றுவது மிக நல்லது. எல்லாவற்றையும் விட, நம் நாட்டு மக்களும் நாகரிகமும் காப்பாற்றப்படவேண்டி, இன்று நடந்து வரும் போரில் வெற்றி பெறவும் பேருதவி செய்தவர் ஆவீர்கள். சேமிப்பு என்பதை ஓர் சிறந்த பொன் மலர் என்றால், வெற்றிக்குச் சேமிப்பு என்பது மணம் வீசும் ஒரு பொன் மலராம்.

—சமீபத்தில் சென்னை வானொலி நிலையத்தினின்று ஒலிபரப்பப் பட்ட பேச்சு.

வானொலி நாட் குறிப்பு.

சென்னை.—1944-ம் ௵ மார்ச்சு ௴ 22-ம் தேதி மாலை 7 மணிக்கு மிஸ்டர் கே. எம். பாலசுப்பிரமணியம், பி.ஏ., பி.எஸ். விஷயம்: "யுத்தப் பிரசாரத்தில் பாட்டுகள்".

காலம் மாறுகிறது

ஐப்பசி, கார்த்திகை தான் நம் நாடுகளில் அடை மழை என்பார்கள். ஆனால், இப்பொழுதோ மாசி மாசத்திலேயும் மானமே கிழிந்து விட்டது போல, மழை எங்கும் கொட்டு கொட்டென்று கொட்டுகிறது. யார் கேட்கிறார்கள் இந்த மழையை? பல இடங்களில் அறுவடை நடக்கும் சமயம் பார்த்து இது கொட்ட ஆரம்பித்ததால், சூட்டடிப்பிற்கு வகையில்லாது போய், ஏராளமான நெல்லும், வைக்கோலும் நாசமாகி விட்டன. விவசாயிகள் கண்ணிலிருந்து கண்ணீர் ஆறாகப் பெருகுகிறது. இன்னொரு பிரதேசத்திலே உளுந்தும், பயறும் விதைக்க எண்ணி யிருந்தவர்கள், இந்த மழையின் கடுமையைக் கண்டு கலங்கிப் போயிருக்கிறார்கள். உளுந்தும், பயறும் நல்ல காய்ச்சல் இருந்தாலல்லவா செழிப்பாக வளரும்? இப்படியாக எவ்வளவோ சங்கடங்கள். ஆனாலும் நமது கவனத்தைக் கவருவது கால மாறுதல் தான்.

மணியான வெற்றிகள்

காலம் மாறிக் கொண்டு தான் வருகிறது. இதை யாரும் ஆக்ஷேபிக்க முடியாது, பருவகாலத்திலும் மாறுதல் ஏற்பட்டிருப்பது போல், பயங்கரப் போரிலே ஈடுபட்டவர்களிடையிலும் நிச்சயமான மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. நேச தேசத்தாருக்கு நிச்சயமான வெற்றிகள் ஒன்றன் மீதொன்றாக வந்து குவிந்து கொண்டேயிருக்கின்றன. எந்த வெற்றியைப் பற்றிய செய்தியை வாசித்தாலும், ‘எப்படியடா இத்தகைய அபாரமான வெற்றியைச் சம்பாதித்தார்கள்? பலே பேஷ்! தொலைந்தான் சத்துரு!’ என்றே எல்லோரும் சொல்லும்படியாக இருக்கிறது. ஒவ்வொரு வெற்றியும் ஒரு மணியான வெற்றியாகவே இருக்கிறது.

நேச தேசத்தாருக்கு ஜெய காலம்

புதிது புதிதான நெருக்கடிகளும், ஆபத்துக்களும், எதிர்ப்புக்களும் நேசப் படையினருக்கு எதிரில் தோன்றிக் கொண்டிருக்கின்றன. ஆனாலும் நேச தேசத்தாருக்கு இது ஜெய காலம். அவதிக் காலம் எல்லாம் அப்பொழுதே மாறி விட்டது. இனி தொட்ட தெல்லாம் பொன் தான் இவர்களுக்கு. ஆகவே, உலகோரே கண்டு வியக்கும் படியான வெற்றிகள் இவர்களைத் தேடி வந்து கொண்டிருக்கின்றன. வெற்றி மங்கை இந்த வீரர்கள் மீது கண் போட்டு விட்டாள். இனி அவளை வேறு புறம் திருப்ப எவராலும் முடியாது.

சமீபத்தில் அரக்கான் மலையில் நடந்த போரின் முடிவிலிருந்தே இது நன்றாகத் தெரிகிறதே! பிரிட்டிஷ், அமெரிக்க, இந்திய, தென்னாப்பிரிக்கத் துருப்புக்கள் கலந்த ஒரு பெரிய சேனை அரக்கான் பிரதேசத்திலே புகுந்து, ஜப்பானியரை விரட்டி யடிக்க முனைந்திருக்கிறார்கள். சென்ற சில மாதங்களாகவே இந்த வேலைகள் மும்முரமாக நடந்து வருகின்றன.

இந்தப் போர் போன மாதம், அதாவது பிப்ரவரியில் ரொம்பக் கடுமையாகி விட்டது. பிரிட்டிஷ் படைகளிடை உள்ள போக்கு வரத்தை யெல்லாம் சிதற அடித்து, அந்தப் படைகளை வளைத்துக் கொண்டு, வெற்றி முரசு கொட்டி, ஜம்பமடித்துக் கொள்ள வேண்டு மென்று ஜப்பானியர் திட்டம் போட்டிருந்தார்களாம். ஒரே மலைக்காடு, மலேரியா ஜுரத்தின் பிறந்த வீடு அது தான் போலிருக்கிறது. ஜப்பானியரே பல காலமாக இத்தகைய காடுகளில் போராடப் பயிற்சி பெற்றிருப்பவர்கள். இந்த இடத்திலே கடும் போர் என்றால் எப்படி யிருக்கும் பார்த்துக் கொள்ளுங்களேன்!

மூன்று வாரங்கள் தொடர்ந்து போர்

மண்டையை வெடிக்கச் செய்யக் கூடிய வெயிலிலும், தூசியிலும், மூன்று வார காலம் தொடர்ந்து போர் நடந்தது. பதினாலாவது சைனியம் ஒரு சமயத்திலே, செலவில் எழுதப்பட வேண்டிய நிலைமைக்கு வெகு அருகில் கூடச் சென்று விட்டதாம். ஆனாலும், அந்த சைனியத்தாரின் மனோ திடமும், வீரமும் உத்சாகமும் அவர்களைத் தளராதிருந்து, தக்க உதவி வரும் வரை சமாளித்து நிற்கச் செய்து விட்டன.

சுமார் எட்டாயிரம் பேர்களுடன் பதினாலாவது சைனியத்தை பதிபோட்டு அமுக்க வந்த ஜப்பானியர், அந்த எண்ணாயிரம் பேர்களில், எட்டிலொரு பங்குக் காரர்களை பரலோக ப்ராப்தி யடையவும், இன்னொரு கால் வாசிப் பேர்களை ஆஸ்பத்திரியில் சேர்க்கவும் விட்டு விட்டு, பின்னடைய வேண்டி வந்ததாம்.

ஜப்பானியர் மனக் கோட்டை

மாயூ என்றொரு மலைத் தொடர். அதற்கு கிழக்கிலும் மேற்கிலும் பிரிட்டிஷ், இந்தியத் துருப்புக்களிருந்தன. இந்த இருதிசைகளையும் ஒரு கணவாய் சேர்த்து வைத்துக் கொண்டிருந்தது. அதைத் துண்டித்து, ஏழாவது இந்திய டிவிஷனுக்கு உதவியே போகாமல் அடித்து விட ஜப்பானியர் முயன்றனர். அது மட்டுமா? வடக்கு தெற்கு சாலையைக் கத்தரித்து விட்டால், ஐந்தாவது இந்திய டிவிஷன் பாடு அரோஹரா ஆகிவிடும் அப்புறம் இந்தியா மீது பாயலாம் என்று ஜப்பானியர் மனக் கோட்டை கட்டிக் கொண்டிருந்தார்களாம்.

ஆரம்பத்திலே, ஜப்பானியருக்கு சந்தோஷத்தை உண்டாக்கும் வகையிலேயே காரியங்கள் நடந்து கொண்டிருந்தன. ஒரு சில இடங்களில் அவர்களது மனக் கோட்டை உண்மையாகக் கூட மாறி விட்டாப்போலிருந்தது. மேலே குறிப்பிடப்பட்ட கணவாயும் அவர்கள் கைவசமாகி விட்டது. அந்தச் சாலையும் ‘கயா’ ஆகி விட்டது. முன்னும் பின்னும் ஜப்பானியப் படைகள் பேயிரைச்சலோடு பாய்ந்து வந்து கொண்டிருந்தனவாம். இனி நமக்கு ஜெயம் தான் என்றே ஜப்பானியர் எண்ணி விட்டார்கள். ரேடியோக்களிலே பிரமாதமாக முழக்கினார்கள்.

சாவுக்குப் பயந்தவர்களல்ல இந்தியர்

ஆனால் நடந்த தென்ன? ஜெனரல் கிறிஸ்டிஸன் என்றொரு சேனாபதி. அவருக்குக் கீழே, இந்தியர்களும், கூர்க்கர்களும், பிரிட்டிஷாரும் சேவை செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லாம், தாங்கள் சாவுக்குப் பயந்தவர்கள் அல்ல என்பதை உள்ளங்கை நெல்லிக் கனி போல் நிரூபித்து விட்டார்கள். சமையற்காரர் உள்பட, சமிக்ஞைக்காரர்களும், குமாஸ்தாக்களும், டிரைவர்களும் துப்பாக்கி பிடிக்கத் தெரிந்த எல்லோருமே ஒன்று கூடி ஜப்பானியரது தாக்குதலைச் சமாளித்து நின்றார்கள்.

ஜப்பானியர் தலை பிழைத்தது தம்பிரான் புண்ணியம்

ஏழாவது டிவிஷனுக்குத் தான் ஏக உதவி தேவையாக இருந்தது. உதவி என்றதும், ஒரு தந்தியோ, ஆளோ போனதும் சொந்தக்காரர்கள் ஓடி வருகிறார்களே, டெலிபோன் போனதும் டாக்டர்கள் வருகிறார்களே அம்மாதிரி ரயிலிலோ, விமானத்திலோ, காரிலோ பறந்து வருவது அல்ல. எதிரியின் எதிர்ப்பையும் சமாளித்துக் கொள்ள வேண்டும். முன்னும் ஏறவேண்டும். உதவியும் புரிய வேண்டும். இதை ஐந்தாம் டிவிஷனைச் சேர்ந்தவர்கள் அற்புதமாகச் செய்தார்கள். இது காரணமாக, வெற்றியை எதிர் பார்த்து வந்த ஜப்பானியர், படு சேதங்களுடன் தலை பிழைத்தது தம்பிரான் புண்ணிய மென்று ஓட வேண்டி வந்து விட்டது. அவ்வாறு ஓட முடியாது தங்கினவர்களில் சிலர் கைதிகளானார்கள். பலர் சாகும் வரை போராடினார்களாம்.

தோல்வி, வெற்றியானது

நேச தேசப் படையினர் பெற்ற இந்த வெற்றி, சரித்திரத்திலே குறிப்பிடப்பட வேண்டியது தான். நிச்சயமாக ஏற்படவிருந்த தோல்வியை, வெற்றியாக மாற்றுவது என்றால் லேசா என்ன?

இந்த வெற்றியைத் தரைப் படையே சம்பாதித்துக் கொண்டாலும், அந்தப் புகழிலே ஒரு நல்ல பகுதியை இந்திய, சீமை விமானப் படையினருக்குச் சேர வேண்டிக் கொடுத்து விட வேண்டியது தான் நியாயம்.

காரணம் என்ன தெரியுமா? ஜப்பானியர்களோ மகா தந்திரசாலிகள். மலைப் பிரதேசத்திலே முன் கூட்டியே வந்து ‘குந்தி’க் கொண்டிருப்பவர்கள். நமது படைகளோ, இப்பொழுது தான் அடி அடியாக ஆயுதங்களைச் சுமந்து கொண்டு முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் படைகளின் சாகசத்தைக் குறித்துப் பலர், கதை கதையாகச் சொல்லுகிறார்கள்.

இந்தியர்கள் சமய சஞ்சீவிகள்

ஆரம்பத்திலே எல்லாம் ஒரே குழப்பமாகவே இருந்ததாம். அப்பொழுது வீர இந்தியர்கள் சரியான சமயத்தில சமய சஞ்சிவிகளாக வந்து தோன்றி, எதிரிகளை அலறியோடச் செய்திருக்கிறார்கள். ஒரு புறம் குடலைக் கலக்கும்படியான பீரங்கிப் போர், இன்னொரு புறம் தமாஷும் கலந்திருந்தது.

அங்கேது தமாஷ் என்கிறீர்களா? இருக்கு! ராவல்பிண்டியைச் சேர்ந்த சுபேதார் ஒருவர், அவரது பெயர் கரீம் கான், அவர் ஒரு நாள் வீரத்தோடு ஏதோ செய்ததை மேலதிகாரிகள் பாராட்டியிருந்தார்கள். அப்புறம் ஒரு நாள் ஐ. டி. எஸ். எம். என்ற விருதும் கொடுத்தார்கள். 'என்னுங்க பிரதர்! யோகம் அடிக்கிறுப்போலிருக்கிறது. இன்னிக்கி என்ன?' என்று அவரது சகாக்கள் கேட்டார்களாம்.

சத்தத்தைக் கேட்டு ஓடிய ஜப்பானியர்

அன்று சுபேதார் கரீம் கான் ஒரு சரியான வேலை செய்தார். அவரும் அவரைச் சேர்ந்த பலரும் பாராக் கோஷ்டியாகப் போய்க் கொண்டிருக்கையில், சற்று தூரத்திலே, ஒரு எதிரிப் படை பதுங்கிக் கொண்டிருப்பதைக் கவனித்து விட்டார்கள். "கரீம் கான் கோஷ்டியிலே இரு பஞ்சாபிகள் முன்னாலே போய்க் கொண்டிருந்தார்கள். அவர்கள் திடீரென, 'பாய்ந்து தாக்குங்கள் முழு பலத்தோடு' என்று கத்தி விட்டார்கள். அவர்களுக்குச் சிறிது தூரத்தில் தான் அவர்களது சகாக்கள் வந்துக் கொண்டிருந்தார்கள். ஆனாலும், அவர்கள் யோசியாமலே தொடர்ந்து கத்திக் கொண்டிருந்தார்கள். அதைக் கேட்டதும் ஜப்பானியர் தங்களது சாமான்களை யெல்லாம் போட்டு விட்டு, எடுத்தார்களாம் ஓட்டம். உடனே சுபேதார் கரீம் கானும் அவரது சகாக்களும் விழுந்து விழுந்து சிறித்துக் கொண்டே, ஜப்பானியர் விட்டுச் சென்ற சாமான்களை, ஒரு தோட்டாச் செலவு கூட இல்லாமலே, கோவேறு கழுதைகளிலே ஏற்றிக் கொள்ளத் தொடங்கி விட்டார்களாம். அன்று அவர்கள் தங்களது முகாமிற்குத் திரும்பியபோது, ஒரே குஷியாகத் தானிருந்திருப்பார்கள் என்று சொல்லவும் வேண்டுமா? இது தமாஷாக இருக்கிறதா இல்லையா?

ஜப்பானியர் மகா தீரர்கள்; சாவுக்குப் பயந்தவர்கள் அல்ல; நம்மிடம் கைதிகளாகப் பிடிபடுவதற்கு விரும்பாது தற்கொலை புரிந்துக் கொள்ளக் கூடியவர்கள்; குற்றுயிராக இருந்த தங்கள் சகாக்களைச் சுட்டுக் கொல்லத் தயங்க மாட்டார்கள் என்றெல்லாம் முன்பு சொன்னீர்களே! இப்பொழுது ஓடுவதும் அதே ஜப்பானியர் தானா?' என்று கேட்கலாம். நல்ல கேள்வி.

பெரிய பயில்வான் என்றால் பிரமாதமான காரியங்கள் பல செய்வான் என்பதில் சந்தேகங் கிடையாது. அவனுக்கு வேளை தவறாது, ஒரு நாள் கூட விடாது, புஷ்டி தரும் ஆகாரங்களைக் கொடுத்துக் கொண்டு வரவேண்டாமா என்ன? ஒரு நாலு நாள் அவனது வயிற்றை வாட வைத்து விட்டுப் பாருங்கள், அப்புறம் என்ன நடக்கிறதென்று. அந்தப் பயில்வானை ஒரு சாதாரண முண்டன் வெகு எளிதில் தூக்கி எறிந்து விடுவான். வயிறு வாடுகையில், அந்தப் பயில்வான் தானே யாருடனும் சண்டைக்குக் கிளம்ப மாட்டானே! ஏதாவது சண்டை வரும்போலிருந்தாலும், சாடையாகவே ஒதுங்கிப் போய்விடமாட்டானா?

அடுப்படி மீது ஜப்யானியர் பாய்ச்சல்

அதே போலத் தான் ஜப்பானிய வீரர்களும் இப்பொழுது மாறியிருக்கிறார்கள் போலிருக்கிறது. மாயூ குன்றுகளிலே ஒரு இடத்திலே பல ஜப்பானிய வீரர்கள் கடுமையான எதிர்ப்புகளையும் சமாளித்துக் கொண்டு, ஒரு சமையலறையைக் கைப்பற்ற, ஒரு சிறிய முகாம் மீது பாய்ந்த சம்பவம் மேலே சொன்னதெல்லாம் உண்மை என்பதை ருசுப்பிக்கிறது. எதிரிக்கு மேற்கொண்டு உதவியும், உணவும் வருவது நாளுக்கு நாள் சிரமமாகி வருகிறது.

இதற்குக் காரணங்கள் இருக்க வேண்டுமல்லவா? எல்லாம் நேச தேசப் படைகளின் பயங்கரமான நடவடிக்கைகள் தான். மலைப் பிரதேசங்களிலே அதிகப் பழக்கமில்லாத மதராஸிகளும், வங்காளிகளும் மலைகளில் ரொம்ப சர்வீஸ் ஆனவர்களைப் போல் போகிறார்கள்.

பிரம்மப் பிரயத்தனம்

இதோ பாருங்கள், சின் மலைப் பிரதேசத்தலே, ஒன்பதாயிரம் அடி உயரமுள்ள ஒரு அடர்ந்த மலை உச்சியிலே, ஒரு பீரங்கிப் பட்டாளம் போய்த் தங்கி யிருக்கிறது. ஆமாம், அதற்கென்ன என்று யார் கேட்பார்கள் தெரியுமா? மேலே சொன்ன மலைப் பிரதேசங்களைப் பற்றிச் சிறிதும் அறியாதவர்கள் தான். பிரம்ம பிரயத்தனம் என்றால். அந்த மலை உச்சிக்குப் பீரங்கியைக் கொண்டு நாட்டியதைத் தான் சொல்ல வேண்டும். இப்பொழுது அங்கே பீரங்கி இருப்பதை யார் பார்த்தாலும், 'அட கடவுளே! எப்படித் தான் கொண்டு போனார்கள் இதை அங்கே?' என்றே மூக்கின் மீது விரலை வைத்துக் கேட்பார்களாம்.

ஜப்பானியர் போக்கு வரவுக்கு இடைஞ்சல்

வளைந்து வளைந்து செல்லுகிறது பாதை. கரணம் தப்பினால் மரணம் தான். கை வீசிக் கொண்டு தாராளமாகப் போக முடியுமா? முடியாது. இப்படிப்பட்ட பாதை வழியே இருநூறு மைல்கள் அந்தப் பீரங்கிகளைச் சுமந்து சென்றிருக்கிறார்கள் நேச தேசத்தார். இந்தப் பாதை கூட, சமீபத்தில் தான் புதிதாக வெட்டப்பட்டது. அதை வெட்டியவர்கள் பட்ட கஷ்டங்கள் கொஞ்சமல்ல. இந்த இருநூறு மைல்கள் போய்ச் சேர மூன்று மாசமாயிற்றாம். இந்த பீரங்கி வைக்கப்பட்டுள்ள இடம் சமுத்திர மட்டத்திற்கு மேல் ஒன்பதாயிரம் அடி உயரத்திலிருக்கிறது. பூலோகத்திலேயே அதி உயரமான பீரங்கி தளம் இது தான் என்கிறார்கள். இங்கிருந்து ஒரு பெரிய பள்ளத் தாக்கை நோக்கி தாராளமாகச் சுடலாமாம். இப்படிப்பட்ட இடங்களில் பீரங்கிகளை நட்டு, ஜப்பானியரைக் கதிகலங்க நேச தேசப் படைகள் சுடுவதனால், ஜப்பானியரின் போக்கு வரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுகிறது.

இது தவிர, இப்பொழுது நடக்கும் அரக்கான் போரில், நேச தேச விமானங்கள் செய்யும் அட்டகாசங்கள் ஜப்பானியரைத் திணற அடித்து வருகின்றன. இந்த விமானங்களிலே, அமெரிக்க விமானங்கள், பிரிட்டிஷ் விமானங்கள் என்றும், அமெரிக்க, பிரிட்டிஷ், இந்திய விமானிகள் என்றும் இருப்பதைக் காணலாம்.

இந்திய விமானிகளின் அருந் திறமை

இந்திய விமானிகள் சென்ற நவம்பரிலிருந்து இது வரை சுமார் ஆயிரந் தடவைகள் பர்மா மீது பறந்து சென்று மூன்று லக்ஷம் பவுண்ட் கனமுள்ள குண்டுகளை வீசி யிருக்கிறார்களாம். சமீபத்தில் கூட அவர்கள் ரங்கூன், ப்ரோம், மாந்தலே ஆகிய பிரதேசங்களிலே அக்னி பகவானின் திருவிளையாடல்களுக்கு வசதி செய்து கொடுத்துவிட்டு வந்தார்களாம். இந்த அரக்கான் முனையில் உள்ள ஒவ்வொரு இந்திய விமானியும், ராயல் விமானப் படைகளுக் குள்ளேயே இது வரை எந்தப் பிரிவினரும் சாதிக்காத காரியங்களைச் சாதித்திருக்கிறார்களாம்.

இந்திய விமானிகள், 'புல்' விமானங்களிலே சென்று வேவு பார்த்து. போட்டோக்களை எடுத்துக் கொண்டு திரும்புகிறார்களாம். தவிர, வெடி விமானங்களிலும் சென்று, ஜப்பானியர் மலைகளில் பொந்துகளில் வசித்திருந்தாலும், துணிந்து தாழப் பறந்து சென்று அந்த இடங்கள் மீது குண்டுகளை வீசுகிறார்கள்.

விமானப் படையின் ஆகாயப் பந்தல்

அரக்கான் போர் முனையில் உள்ளவர்களுக்கு இந்த விமானப் படையினர் சமீபத்தில் நடந்த தாக்குதல்களின் போது அளித்த உதவியை லேசாகச் சொல்லி விட முடியாது. இந்த விமானப் படையினர் 'ஆகாயப் பந்தல்' போட்டார்கள். இந்தப் 'பந்தல்' ஒழுகவே இல்லையாம். அதாவது இந்த விமானங்களாலாகிய பாது காப்புப் பந்தலை எந்த எதிரி விமானமும் துளைத்துக் கொண்டு புகுந்து வந்து, நம்மவர்களுக்குச் சேதமெதையும் உண்டாக்க முடியவில்லையாம். இந்த உதவி இல்லாதிருந்தால், நம்மவர்கள் முன்னேறி யிருக்கவே முடியாது. ஏனென்றால், எதிரி தனது முன்னேற்றத்திற்கு இதே ஏற்பாடுகளைச் செய்து வைத் திருந்தானாம். ஆனால், நமக்குத் தான் இப்பொழுது எங்கு போனாலும் வானத்தில் ஆதிக்கம் ஏற்பட்டிருக்கிறதே! அப்படி யிருப்பதால், நம்மவர்களை எந்தப் பயனும் அசைக்க முடிவதில்லை.

இரண்டாவது, இந்திய, பிரிட்டிஷ் விமானப்படைகளில், ஆட்களை ஏற்றிச்

(10-ம் பக்கம் பார்க்க)

மாணவரும் யுத்த முயற்சிகளும்

பொய் வதந்திகளைப் பொசுக்க வேண்டும்

வெள்ளி செம்பு நாணயங்களைச் சேமிக்கலாகாது

(மிஸ்டர் எல். இ. வீரபாகு பிள்ளை, பி.ஏ., எல்.டி.)

நான்கு வருடங்களாக நடைபெற்று வரும் இந்த யுத்தத்தின் பயனாக, உலகில் எவ்வளவோ பெரிய பெரிய மாறுதல்களெல்லாம் உண்டாகி விட்டன. உலகம் இன்று மிகுந்த நெருக்கடியான நிலைமையிலே இருக்கிறது. இப்பொழுது நடக்கும் யுத்தம் அதிக காலத்திற்கு நீடிக்குமானால், நாடுகள் வெகு விரைவில் பஞ்ச நிலைமையை அடைந்து பரிதவித்தல் கூடும். இப்போதே பல இடங்களிலும் அரிசி இல்லை, விறகு இல்லை, துணி இல்லை என்பன போன்ற நிலைமை ஏற்பட்டு வருவதைக் கேள்விப்பட்டு வருகிறோம். அதலின், நாம் இந்த யுத்தத்தை விரைவில் முடிவிற்குக் கொண்டு வருவதற்கான வழிகளிலே அரசாங்கத்திற்கு நற்றுணையாக நின்று உதவி புரிதல் வேண்டும். நாம் என்ன உதவி செய்துவிடப் போகிறோம் என்று எண்ணி, பேசாம லிருந்துவிடக் கூடாது. அங்ஙனம் இருப்போமாயின், நாட்டிற்கும் நமக்கும் அநேக தொல்லைகள் ஏற்படும்.

"சிறு துளி பெரு வெள்ளம்"

ராமபிரான் ராவணனோடு யுத்தம் செய்ய சேது பந்தனம் செய்தபொழுது உதவி செய்த ஒரு அணிப் பிள்ளையைப் போல், நம்மால் இயன்ற உதவியை அரசினருக்குச் செய்தல் வேண்டும். சிறு உதவியாயினும் பலரும் செய்யத் தொடங்கினால் "சிறு துளி பெறு வெள்ள மாகி", மிகுந்த பயனை அளிக்கும். இச்சமயத்தில் கல்லூரி மாணவர்கள் தாம் சேமிக்கக் கூடிய அற்பத் தொகையையும் வீண் செலவு செய்யாமல், டிபன்ஸ் பாண்டுகள், டிபன்ஸ் சேவிங்ஸ் சர்டிபிகேட்டுகள், டிபன்ஸ் ஸ்டாம்புகள் முதலியவை வாங்குவதன் மூலம், அரசாங்கத்தாருக்கு உதவி செய்வதோடு, பின்னர் தாங்களும் நல்ல பயனை அடையலாம். அனாவசியமான பொருள்களில் மாணவர்கள் செலவிடும் தொகையை அரசினர்களுக்குக் கொடுப்பின், அதனால் எவ்வளவோ பெரிய பெரிய பயனேற்படும்.

உதவி செய்ய வழிகள்

மாணவர்கள் கலைச் சங்கங்களாக ஏற்பட்டு பாட்டுக் கச்சேரி நகைச்சுவை நாடகம், சரித்திர சம்பந்தமான நாடகம், விளையாட்டுப் பந்தயம் முதலியவைகளை நடத்தி, பணம் வசூல் செய்து பொருள் உதவி செய்யலாம். தேக வலிமையும் ஆற்றலும் உள்ள மாணவர்கள், ஏ.ஆர்.பி—யிலும் பட்டாளத்திலும், கடற்படையிலும், விமானப் படையிலும், தத்தமக்குத் தகுந்த படையில் சேர்ந்து புகழும் பொருளும் அடையலாம். யுத்த காலத்திலே மக்கள் பொய் வதந்திகளை எல்லாம் நம்புபவர்களாக இருப்பதோடு, சிற்சில சமயங்களிலே தாங்களே அறியாமல் அவைகளை பரப்புவோர்களாகவும் இருக்கிறார்கள். பொய் வதந்தியால் எவ்வளவோ கேடுகள் ஏற்படுகின்றன. இவ்வதந்திகளுக் கெல்லாம் மறுப்பு விடுத்துக் கொண்டிருப்பதும், காரணம் சொல்லிக் கொண்டிருப்பதும், அரசினருக்கு எளிதான காரியம் அல்ல. பொய் வதந்தியைப் போக்கும் வேலையில் மாணவர்கள் சிந்தையைச் செலுத்தலாம்.

ஏ.ஆர்.பி. பயிற்சி

அது அப்படியிருக்க, யுத்த காலத்தில், பட்டணவாசிகள் கவனிக்க வேண்டிய ஏ.ஆர்.பி. போன்ற முறைகளைத் தவறாமல் பின் பற்றுவதற்கு மாணவர்கள் உதவி செய்யக் கூடும். 'ப்ளாக் அவுட்' திட்டத்தின் பயனை அநேகர் நன்கறியலாம். விளக்குகளை வெளிச்சம் வெளியில் தெரியும்படி எரித்துக் கொண்டிருக்கிறார்கள். இத்தகையோர் நன்கறியும்படி, விளக்கிச் சொல்லலாம். மற்றும் ஏ.ஆர்.பி. சம்பந்தமான எல்லா விஷங்களையும் பொது மக்கள் நன்கு அறியும்படி போதிக்கலாம். அபாயச் சங்குகள் அலரும்போது, மக்களை மறைந்து கொள்ளச் சொல்லியும், மற்றும் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் கற்பிக்கலாம்.

இரத்த தானம்

பல மாணவர்கள் உடுப்பு விஷயத்திலே ஏராளமாகச் செலவு செய்பவர்களாக இருக்கின்றனர். இத்தகையார், அடிக்கடி புது உடுப்புத் தேடுவதை நிறுத்தி, பழைய உடுப்புகளையே நன்றாக உபயோகிக்க வேண்டும். இதனால், பொருள் மிச்சமாவதுடன், நாட்டிலே துணிப் பஞ்சம் ஏற்படுவதையும் தடுக்கலாம். சிலர் ஆபத்துக் காலத்தில், காயமடைந்தவர்களின் உபயோகத்தின் பொருட்டு, ரத்த தானம் கொடுக்கலாம். கொடுக்கக் கூடிய நிலைமையி லுள்ள மற்றவர்களையும் மாணவர்கள் கொடுக்கும்படி தூண்டலாம்.

புத்தகங்களும் பத்திரிகைகளும் உதவுக!

வீட்டிலுள்ள தாய் தந்தையார் சகோதரர்கள் முதலியோர்களுக்கு நாட்டில் பஞ்ச நிலைமையையும் யுத்த செய்திகளையும் சொல்லி, அனாவசியமான செலவுகளை நிறுத்தச் செய்யலாம். துணிமணிகளிலும் மற்றப் பொருள்களிலும் எவ்வளவுக்குக் கூடுமோ அவ்வளவுக்குச் சிக்கனமாக இருக்கச் செய்யலாம். மாணவர்கள் தாங்கள் வாங்கிப் படிக்கும் கதைப் புத்தகங்கள், நாவல்கள் பத்திரிகைகள், முதலியவைகளை பட்டாளத்தினருக்கு உதவுவதுடன், மற்றவர்களையும் உதவச் செய்யலாம். படிப்பில் போதிய அளவில் தேர்ச்சி பெற்றவர்கள் தொழிற்சாலைகளில் சேர்ந்து யுத்தத் தளவாடங்கள் ஏராளமாக உற்பத்தியாவதற்குப் பெருந் துணை புரியலாம்.

உணவுப் பொருள் பெருக்கம்

உயர்தரப் பள்ளிக்கூடங்களையும் கலாசாலைகளையும் அடுத்துள்ள தாராளமான தரிசு நிலங்களில், பள்ளிக்கூடத் தோட்டங்களும் உண்டு. இவைகளிலே வாழை, கத்தரி, மிளகாய், முள்ளங்கி, வெண்டை, தக்காளி, கருணை முதலிய காய் கறிகள் பயிர் செய்து விற்பனை செய்யத் தொடங்கினால், நல்ல ஊதியம் கிடைக்கும். இதனை யுத்த நிதிக்குக் கொடுத்து உதவலாம். இதனால் நாட்டிலே உணவுப் பொருள் விருத்தியாகி பஞ்ச நிலைமை யேற்படாமலிருப்பதுடன், விவசாய சம்பந்தமான விஷயங்களிலும் மாணவர்களுக்குப் போதிய அறிவு ஏற்பட இடமுண்டாகும். கிராமத்திலே வாழ்கின்ற மக்கள், உலக நிலைமையை நன்கு அறியாதவர்களாக, வழக்கப் பிரகாரமே வாழ்க்கையைக் கஷ்டத்துடன் நடத்தி வருகின்றனர். இவர்கள் உலக நிலைமையை நன்கு அறியும்படியும் எதிர்கால வாழ்க்கையைச் சீராக நடத்தும்படியும் போதிக்கலாம்.

நமது கிராமங்களிலே குளத்தை யடுத்தும், வீட்டுக்குப் பின்புறத்திலும் ஆற்றின் கரைகளிலும் காய்கறிகள்முதலியன பயிர் செய்வதற்குத் தகுதியான தரிசு நிலங்கள் ஏராளமாகக் கிடக்கின்றன. இவைகளில் காய் கறிகளைப் பயிர் செய்து பலனைத் தாங்களும் பிறரும் அடையும்படி செய்யும்படி, கிராம வாசிகளை மாணவர்கள் தூண்ட வேண்டும். விடுமுறை காலங்களில் மாணவர்கள் இவ்விதமான கிராமத் தொண்டை மேற் கொள்வாராயின், அதுவும் கிராமத்தார்கள் மாணவர்கள் என்னும் இருபாலருக்கும் மிகுந்த பயனுள்ளதாக இருக்கும்.

பாதுகாப்புப் படையில் சேருக!

அது தவிர, முக்கியமாக மாணவர்கள் செய்ய வேண்டிய மற்றொரு வேலையிருக்கிறது. அது என்னவெனில், நமது நாட்டிலே ஆங்காங்கு அமைக்கப்பட்டிருக்கும் சிவில் டிபன்ஸ் முறையில் சேர்ந்து, நாட்டின் பாதுகாப்பில் ஈடுபட மக்கள் அனைவருக்கும் ஊக்கத்தை உண்டாக்க வேண்டும். கழிவுக் காகிதம் முதலியன அரசினருக்கு மிகுந்த இன்றியமையாத பொருள்களாக இருக்கின்றன. இவைகளில் மாணவர்களால் ஆகக்கூடிய பொருள்களை யெல்லாம் சேகரித்து, அரசினருக்கு அளிக்கலாம். இந்த யுத்தத்

தில் நாம் வெற்றி யடைதற் பொருட்டு எவ்வளவு தூரம் நமது சௌகரியங்களை யெல்லாம் தியாகம் செய்யத் தயாராக இருக்க வேண்டு மென்பதே பெரும்பாலருக்குத் தெரியாம லிருக்கிறது. இது பற்றியும் மாணவர்கள் விடுமுறை காலங்களிலே தக்கபடி பிரசாரம் செய்து, மக்கட்கு தியாக உணர்ச்சியை உண்டாக்கலாம். பழைய இரும்பு தகரம் ரப்பர் முதலிய பொருள்களும் அரசினருக்குத் தேவையாதலின், இவைகளையும் நகரம் கிராமம் முதலிய இடங்களிலிருந்து சேகரித்துக் கொடுக்கலாம். இங்ஙனம் சேகரித்துக் கொடுப்பின், அவை அநேக வழிகளிற் பயன்படும்.

பிரயாணத்தைக் குறைக்க

அநேக மாணவர்கள் அனாவசியமாகப் பலவிடங்களுக்குப் பிரயாணம் செய்கிறார்கள். இந்த வேலையற்ற பிரயாணத்தினால் மாணவர்களுக்குப் பொருள் நஷ்டமாவதுடன், அத்தியாவசியமான யுத்த முயற்சியும் தடைப்படும். ஆதலால், அனாவசியமான பிரயாணத்தை நிறுத்திக் கொள்ளுதல் வேண்டும். மாணவர்கள் விடுதிகளில் வாசம் செய்யும் மாணவர்கள், மின்சாரத்தை வீணாக விரயம் செய்யக்கூடாது. தற்கால உலகிற்கு மின்சார சக்தி எவ்வளவு அவசியமானது என்பதை நான் கூறவேண்டியதில்லை. வீண் விரயத்தை நிறுத்திக்கொண்டால், இந்த மின்சாரம் தொழிற் சாலைகளுக்கு அதிகப் பயன்தரும். வீணே விளக்கெரிக்கும் வீடுகளுக்குச் சென்று, அவர்கள் எரிப்பதையும் தக்க நியாயங்கள் காட்டித் தடுக்கலாம்.

பொது மக்கள் பலபேர் வெள்ளி நாணயங்களையும் செப்பு நாணயங்களையும் சேகரித்து வைப்பதில் மோகங் கொண்டிருக்கிறார்கள். தற்கால உலகத்திற்கு இந்த மோகம் நன்மை யளிக்கத் தக்கதல்ல. மாணவர்கள் இம்மோகத்தில் ஈடுபடாமலிருப்பதுடன் இம்மோகம் உள்ளவர்களைக் கண்டுபிடித்து அவர்களும் இவ்வேலையில் ஈடுபடாதிருக்கும்படிச் செய்யலாம். காயப் பட்டவர்களுக்கு முதற் சிகிச்சை செய்வதையும், மாணவர்கள் நன்கு அறிந்திருக்க வேண்டியது அவசியம். அங்ஙனம் அறிந்திருப்பதால், ஆபத்துக் காலத்தில் அவர்களே தகுந்த டாக்டர் வரும் வரை, பொது மக்களுக்கு உதவி செய்யலாம். ஒவ்வொரு மாணவனும் மனத்தினாலும் காயத்தினாலும் வாக்கினாலும் இது சமயம் அரசினருக்கு தக்கபடி உதவி புரிதல் மிகவும் அவசியம். இந்த யுத்த விஷயங்களில் சிரத்தை இல்லாமலிருக்கும் ஒவ்வொரு மாணவனையும், சிரத்தையுடைய மாணவர்கள் நன்கு சிரத்தை கொள்ளுமாறு செய்ய வேண்டும். அங்ஙனம் செய்யின் ஏராளமான மாணவர்கள் யுத்தத்திலே தங்கள் சிந்தையை செலுத்தி, யுத்த முயற்சியில் ஈடுபடுவார்கள். உதவி செய்யவே, வெற்றிக்குமேல் வெற்றி அரசினருக்கு வரும். நமக்கும் நாட்டுக்கும் புகழும் பெருமையும் வரும்.

சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தி லிருந்து 8-3-44-ம் தேதி ஒலி பரப்பப்பட்ட பிரசங்கம்.

(8-ம் பக்கம் தொடர்ச்சி)

செல்லும் விமானங்கள் பல இடங்களுக்கும் உணவுப் பொருள்களையும், உதவிப் பொருள்களையும் சுமந்து சென்று, போட்டுவிட்டு வந்திருக்கின்றன. இருபத்தியொரு நாட்களில் சுமார் ஆயிரத்தைந்நூறு டன் எடையுள்ள முக்கியமான சப்ளைகளை வான வீதி வழியாக அதிவேகமாகச் சுமந்துச் சென்று அளித்துவிட்டு வந்திருக்கிறார்கள் என்று பார்த்துக் கொள்ளுங்களேன்.

சென்ற மாத ஆரம்பத்தில் ஒரு நாள் ஒரு போர் முனையிலிருந்து, ''ஆபத்து! ஆயுத கையிருப்பு பூஜ்யமாகிவிடும்போலிருக்கிறது. உடனே உதவி தேவை!'' என்ற செய்தி வந்ததாம். உடனே சப்ளை விமானங்கள் புறப்பட்டனவாம். பலமான எதிர்ப்பு இருந்தபடியால், அவை திரும்பி விட்டனவாம். பிறகு, துருப்பேற்றிச் செல்லும் விமானப் படையின் தலைவர், அந்த விமானப் படைத் தலைமையில் சென்றாராம். ஆயுதங்கள் பத்திரமாகப் போய்ச் சேர்ந்து விட்டனவாம். ஆகாயத்திலிருந்து, கீழே உள்ள டாங்கிப் படைகளுக்கு, பல்லாயிரம் காலன் கணக்கிலே இந்த விமானங்கள் பெட்ரோல் சப்ளை செய்கின்றனவாம். ஜெர்மானியரை அழவைக்கும் அத்தனை விமானங்களும்—அதாவது ஹரிகேன் (சூறாவளி), ஸ்பிட்பயர் (அனல்கக்கி), பேபைட்டர் (மலைப் பாம்பு சண்டைக்காரி) விமானங்களும்—இந்த பர்மா முனையிலும் கொட்டை பரப்புகின்றன. போர் முனையிலே காயம்பட்டுக் கிடப்பவர்களைக் கூட இந்த விமானங்கள் தூக்கி வந்து விடுகின்றனவாம்.

என்ன செய்வான் ஜப்பானியக் குள்ளன்? அவனும் ஏதேதோ தந்திரங்கள் தான் செய்து பார்க்கிறான். மெள்ள இந்திய மண்ணில், வங்கத்தின் ஒரு கோடியில் வந்திறங்கக் கூட அவன் முயற்சித்து விட்டான். ஆனால் நம்மவர்கள் தான் கண்ணிலே எண்ணெயை ஊற்றிக்கொண்டிருப்பவர்கள் போல, அதி உஷாராக இருக்கிறார்களே! ஜப்பானியரை எங்கு கண்டாலும் உதைக்கிறார்களே!

காலம் மாறுகிறது. ஜப்பானியர் வெற்றி மேல் வெற்றி கண்ட நாட்கள் எல்லாம் மாறி விட்டன. இப்பொழுது எங்கும் அவர்களுக்குத் தோல்வி தான்.

இதோ பஸிபிக் பிரதேசத்தைப் பாருங்களேன். அமெரிக்கக் கடற்படைத் தலைவரும், ஜெனரல் மக் ஆர்தரும் தங்கள் மூளைகளுக்குச் சரியான வேலை கொடுத்து பகுத் தாக்குதல்களுக்குத் திட்டங்கள் போட்டு, ஜப்பானியரது மூளைகளைக் குழம்ப அடித்து வருகிறார்கள்.

அட்மிரால்டி தீவுகளில் அமெரிக்கப் படை வந்திறங்கியது போன வாரத்துப் புதுச் சேதி. பஸிபிக் பிரதேசத்திலே நடப்பதே தீவுக்குத் தீவு தாவும் போர் தான். இப்படி மெல்ல மெல்லத் தாவி, ஜப்பானிய சாம்ராஜ்யத்தின் ஹிருதயத்தை போய்த் தாக்கி விட வேண்டுமென்பதே இந்தத் திட்டத்தின் அந்தரங்க நோக்கமாகும். இந்த நோக்கம் வெற்றியை அளிக்கவே போகிறது.

திடீர் சம்பவங்கள்.

ஜப்பானை எப்படி எப்படி, எங்கெங்கு தாக்கலாம் என்பதை ஆராய ஒரு கோஷ்டியார் ஆறு மாத காலம் ஜப்பானியர் கால் வைத்திருக்கும் பிரதேசங்களுக்கு அருகில் எல்லாம் போய் விட்டு, இப்பொழுது தங்கள் நாடு திரும்புகிறார்கள். அவர்கள் சொல்லி யிருப்பதைப் பார்த்தால், திடீர் திடீரென எதிர்பாராத சம்பவங்கள் பல நடக்கலாம்; நூதன முறைகள் கைப்பிடிக்கப் படலாம்; நவீன யுத்த சாதனங்கள் வெளியே தோன்றலாம் என்று தெரிகிறது. ஜெர்மானிய யுத்தம் முடியும் வரை ஜப்பானியரை யாரும் சும்மா விட்டு வைப்பதாக இல்லை.

ஒரு டச்சு சப்மரீன் மட்டும், பர்மாவுக்கு வரும் ஜப்பானிய சப்ளை கப்பல்களை வேட்டு விட்டுக் கொண்டே வந்திருக்கிறது. ஒரு மாசத்தில் மட்டும் ஐம்பத்தையாயிரம் டன் எடையுள்ள கப்பல்களை அரோகரா ஆக்கி யிருக்கின்றது.

இப்படியே போய்க் கொண்டிருந்தால், ஜப்பான் இனி தலை தூக்க முடியுமா என்ன? ரேடியோ மூலம் என்ன ''கப்ஸா'' வேண்டுமானாலும் விடலாம். ஆனால் சாதிக்கக் கூடிய காரியம் அதிகமாக ஏதும் இராது.

ட்ரக் துறைமுகத்திலே யிருந்து தப்பிப் பிழைத்த ஜப்பானியர் கடற்படை இப்பொழுது எங்குமே தென்பட வில்லையாம். அது ஒரு வேளை சிங்கப்பூருக்குப் போயிருக்கலாம் என்கிறார்கள். அதோடு ஜப்பான் தனது மானத்தைக் காத்துக் கொள்ள, வந்தது வருகிறது, இருந்த இடத்தில் இருந்து மண்டையைப் போடுவதை விட ஏதாவது கலாட்டா செய்து விடு காலாவதியாகலாமே என்று எண்ணி, தனது கப்பற் படையை இந்தியா மீதோ, இலங்கை மீதோ படை யெடுத்துச் செல்லக் கட்டளை யிடக்கூடும் என்கிறார் ஒருவர்.

ரொம்பச் சரி! அமெரிக்காது உதையை விட, இந்தியரது பூசை நன்றாக இருக்குமென்ற யோசனை போலிருக்கிறது அவர்களுக்கு. பேஷாக வரட்டும், சம்பிரமமாகக் கொடுக்கக் காத்திருக்கிறார்கள் நம்மவர்கள். யார் யாருக்கு யார் கைகளில் முடிவு ஏற்பட வேண்டு மென்று இருக்கிறதோ அவர்கள் கைகளால்தானே கிடைக்கும்? ஜப்பானியக் கடற் படையில் ஒரு பகுதி இந்தியாவிலிருந்து செல்லும் விமானப் படையால் ஜலவாசத்திற்கு அனுப்பப்பட வேண்டு மென்றிருந்தால், விதி அந்தப் படையை இந்தியாவிற் கருகே கொண்டு வரத் தானே செய்யும்?

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

தந்தி, டெலிபோன் முதலிய வசதிகள் அமைக்க முதலீடு .. .. ரூ. 4·20 கோடி.

1943–44-ம் வருஷத்தில் சிவில் செலவினங்களில் ரூ. 8·29 கோடி அதிகப்பட்டிருக்கிறது. மொத்தச் செலவு ரூ. 76·78 கோடி என்று திட்டமிட்டிருக்கிறார்கள். இதில் 8 கோடி ரூபாய்க்கு மேல் அதிகச் செலவாவதற்குக் காரணமென்ன? இந்தச் செலவினங்களாவன :—

எதிரி கைப் பற்றிய நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வந்து சேர்ந்திருக்கிறவர்களுக்கும், எதிரி நாடுகளிலேயே நிறுத்தப் பட்டிருக்கிறவர்களின் குடும்பங்களுக்கும் உதவி நிதி .. ரூ. 2 கோடி.

அதிகமாக உணவுப் பொருட்களைத் தயார் செய்யும்படி தூண்ட வேண்டி, மாகாணங்களுக்கும் சமஸ்தானங்களுக்கும் மானியம் .. ரூ. 2 கோடி.

வங்காளப் பஞ்ச நிவாரணத்தின் பொருட்டு இந்திய அரசாங்க உதவி. ரூ. 3 கோடி.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் பெரிதும் வரவேற்கப்படும் இனம் ரூ. 10 லட்சம். இது கைத் தொழிலாராய்ச்சியின் பொருட்டு ஒதுக்கப்பட்டிருக்கிறது. யுத்தம் முடிந்த பிறகு, இந்தியா அரசாங்கத்தார் 1 கோடி ரூபாய் மானியம் வழங்குவார்கள். இத்தொகை 3 அல்லது 4 வருஷங்களில் பகிர்ந்து கொடுக்கப்படும். இந்தத் தொகையைக் கொண்டு ஆராய்ச்சியும் உற்பத்தியும் சேர்ந்த திட்டம் நிறைவேற்றப் படும். இந்தத் திட்ட சம்பந்தமாக இன்னின்னது செய்யப்பட வேண்டுமென்பது பற்றி, விஞ்ஞானக் கைத் தொழில் ஆராய்ச்சிக் கழகத்தார் வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். சென்ற வருஷம் விலைவாசிகள் மிகவும் அதிகப்பட்டன. ஆகவே, அரசாங்கத்தாரும் பொது மக்களும் வெகுவாகக் கவலைப் பட்டனர். நாட்டின் கொள் முதல் சக்தி வெகுவாக உயர்ந்திருந்தது. எனவே, இதனால் ஏற்படும் விலை உயர்வைத் தடுக்க, பல முறைகளைக் கையாள வேண்டி யிருந்தது. உதாரணமாக, விலை நிர்ணயக் கொள்கைச் சட்டம் அக்கிரமச் சேமிப்பையும் அநியாய லாபத்தையும் தடுக்கும் அவசரச் சட்டம், ஆகியவற்றை பொது மக்கள் வெகுவாக வரவேற்கிறார்கள். அது மட்டுமன்றி, மக்களுக்குத் தேவையான பொருட்களையும் தங்கத்தையும் அதிகமாக விற்பனைக்கு விடுத்தனர்.

அரசாங்கத்தார் வகுத்துள்ள "சேமித்துக் கடன் கொடுக்கும் இயக்கத்தின்" பயனாக, நாட்டின் கொள் முதல் சக்தி வெகுவாக பாதிக்கப்பட்டு விட்டது. 1943-ம் வருஷம் ஜனவரி மாதம் 31-ம் தேதியிலிருந்து 1944 பிப்பிரவரி மாதம் 1-ம் தேதிக்குள், அதாவது 1 வருஷத்திற்குள்ளாக, பாதுகாப்புக் கடன்களாகப் பொது மக்கள் ரூ. 115 கோடி கொடுத்திருக்கிறார்கள். இப்போது ஒரு பரந்த ஸ்தாபனமாக சொற்ப சேமிப்பு இயக்கம் ஆரம்பமாகி யிருக்கிறது. பிரிட்டனில் இந்த சொற்ப சேமிப்புத் திட்டத்தின் பயனாக, பிரிட்டிஷ் அரசாங்க நிதிக்குப் பெருந் தொகை சேர்ந்தது மட்டு மன்றி, விலைவாசிகள் வெகுவாக உயர ஓட்டாமல் தடுத்தது என்று இங்கே குறிப்பிடுவது பொருத்தமாகும்.

நிதி மந்திரி தன் பிரசங்கத்தில், இனி விதிக்கப்பட வேண்டிய பல வகை வரிகளைக் குறித்தும் குறிப்பிடுகிறார்: தேயிலை, காப்பி, பாக்கு ஆகியவற்றிற்கு 1 பவுண்டுக்கு 2 அணா விகிதம் புதிய கலால் வரி; 10 கோடி ரூபாய் அதிக வரவாக வேண்டியதை முன்னிட்டு புகையிலை வரியை அதிகப்படுத்த வேண்டும். சாதாரண வகைகளுக்கும் புகையிலைக்கும் விதிக்கப்பட்டுள்ள 20 சத விகித இறக்குமதி வரியை, 50 சத விகிதமாக உயர்த்த வேண்டும். ரூ. 15,000 க்கு அதிகமான வருஷ வருமானமுள்ளவர்களுக்கு விதிக்கப்படும் வருமான வரியை உயர்த்த வேண்டும். ரூ. 35,000த்திலிருந்து 2 கோடி ரூபாய் வருமான முள்ளவர்களின் 'சூபர் டாக்சி'ல் ½ அணா விகிதம் உயர்த்த வேண்டும். கார்ப்பொரேஷன் வரியை 1 அணாவிலிருந்து 3 அணாவாக உயர்த்த வேண்டும். வருஷம் ஒன்றிற்கு 'ரூ 1,500 வருவாயுள்ளவர்களுக்கு வருமான வரி' விதிக்கப்பட வேண்டுமென்றிருப்பதை' '2,000 ரூபாய் வருவாயுள்ளவர்களுக்கு' என்று மாற்றி யிருப்பது பெரிதும் வரவேற்கத் தக்கது.

"சம்பாத்தியத்திற் கேற்றபடி கொடுங்கள்" என்னும் திட்டத்தில், கால் வருஷ வருமான வரியை முன்னதாகவே கட்டினால், 2 சத விகித வட்டியும் கிடைக்கிறது. மற்றொரு புதுமையும் இதில் இருக்கிறது. இதை மாகாண அரசாங்கங்கள் நிறைவேற்ற வேண்டும். இதன்படி விவசாயச் சொத்துக்கள் அல்லாதவற்றிற்கு வரி விதிக்கப்பட வேண்டும். இது கொடும் வறுமையைப் போக்குவது மட்டுமன்றி, யுத்தம் முடிந்த பிறகு ஏற்படப் போகும் புனர்நிர்மாணத்திற்கும் உதவும்.

புனருத்தாரணத் திட்டம்

மத்திய அரசாங்கத்தின் நிதியும் மாகாண அரசாங்கங்களின் நிதியும் மிகவும் உறுதியாயிருக்கின்றன வென்று வற்புறுத்திக் கூறினார். அந்தந்த வரி வருவாய்களின் நிலைமையை யொட்டித்தான் நிதி நிலைமையும் அமையும் என்றும் கூறினார். யுத்தம் முடிந்த பிறகு முதல் 5 வருஷங்களில் வரி வசூல் மூலமாகவும் கடன் வாங்குவதன் மூலமாகவும் 1,000 கோடி ரூபாய் சேருமென்றும், யுத்தத்திற்குப் பிறகு ஏற்படப் போகும் புனர் நிர்மாணத் திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு உபயோகிக்கப்படுமென்றும் கூறினார். இந்தப் பிரசங்கத்தில் கவனிக்கப்பட வேண்டிய மற்றொரு விஷயம் "டாலர் நிதி". யுத்தம் முடிந்தபிறகு, இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் வியாபார வசதிகளை அமைத்துக் கொள்ளும் பொருட்டு இந்த நிதி பெருக்கிக் கொண்டு வரப்படும். மொத்தத்தில், இந்த யுத்தத்தினால் நமக்குப் பெரும் பளு ஏற்பட வில்லை என்பது ஆறுதலளிக்கத் தக்கதே. ஒரு நாடு யுத்தத்தின் பொருட்டு மட்டுந் தான் செலவு செய்ய வேண்டும் என்பது முடியாத காரியம். இந்தியாவிலுள்ள கைதேர்ந்த தொழிலாளர்களின் பொருட்டும் மூலப் பொருட்களின் பொருட்டும் இந்தியா அரசாங்கத்தார் செலவிடா விட்டாலும், அதிகப்படியாக தேர்ந்த தொழிலாளர்களும் மூலப் பொருட்களும் மேலும் தேவையா யிருந்தால், நாட்டின் பொருளாதாரச் சுமை வெகுவாக அதிகப்படும் எனத் தக்க நிலைமைக்கு, இன்று இந்தியா வந்து விட்டது. இந்தக் கொள்கை, இந்த வரவு செலவு திட்டத்தில் நன்றாக ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. யுத்த காலத்தில் ஒரு நாட்டின் பொருளாதார உறுதிப்பாடு அந்நாட்டு மக்களின் நல்வாழ்வையும், அது போராடுதற்குத் தளமாக எந்த அளவிற்கு உபயோகப்படும் என்பதையும் பொருத்துத்தான் அமையும் என்னும் கொள்கை, இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.

எச். பி. பி.

தனிப்பட கட்டுப் படுத்தப்பட்டிருக்கும் உணவுப் பொருள்கள், மற்றப் பொருள்களின் விலைகள் நீங்கலாக, ஏனைய பொருள்களின் அடக்க விலைக்குமேல், 20 சத விகித லாபத்திற்குமேல், அல்லது அரசாங்கத்தார் விதித்திருக்கும் உயர்ந்த பக்ஷ அதிகமான விலைக்கு அதிக விலை கடைக்காரன் சொன்னால், இலாபம் வைத்து விற்க, கண்ட்ரோலர் ஜெனரல் அனுமதித் திருந்தாலல்லது, அப்படி விற்கிறவர்கள் 1943-ம் வருஷத்திய அக்கிரமச் சேமிப்பையும் அநியாய லாபத்தையும் தடுக்கும் அவசர சட்டத்தின் 6-வது விதியின்படி குற்றவாளிகளாகிறார்கள். ஒரு பொருளை வாங்குபவரை வேறொரு பொருளையும் வாங்கும்படி வற்புறுத்துவதும், குற்றமாகும்.

அனுமதிக்கப்பட்டிருக்கும் விலையைவிட, அதிக விலைக்கு ஒரு வியாபாரி ஒரு பொருளை உங்களுக்கு விற்றதாக நீங்கள் நினைத்தாலும் நீங்கள் விரும்பாத பொருளை வாங்கும்படி உங்களை வற்புறுத்தினாலும் **வெளியூர்களில் வியாபார வரி உத்தியோகஸ்தர்களுக்கும் சென்னையில் சிவில் சப்ளை கமிஷனருக்கும் தகவல் கொடுங்கள்.**

ஞாபகமிருக்கட்டும் : **பொருள்களை வாங்கும் ஒவ்வொருவரும் ஒரு இன்ஸ்பெக்டரைப்போல் வேலை செய்தால் மட்டுந்தான்** இந்த அவசரச் சட்டத்தை வெற்றிகரமாக அமுல் நடத்த முடியும்.

யுத்த நாட் குறிப்புக்கள்

பிரிட்டனும் ஜெர்மனியும்.

மார்ச்சு 7.—பார்லிமெண்ட் சபையில், கப்பற்படை மந்திரி மிஸ்டர் ஏ. வி. அலெக்சாந்தர் கப்பற்படை வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்த போது யுத்த நிலைமையை விளக்கிப் பேசினார்.

காமன்ஸ் சபையில் பேசிய மிஸ்டர் சர்ச்சில் அடுத்தாற்போல் நடைபெறப் போகும் விவாதத்தில் மூவகைப் படையினரின் சம்பளங்களைக் குறித்தும் விவாதிக்கப்படும் என்று கூறினார்.

மார்ச்சு 8.—பிரிட்டனின் யுத்தத் தளவாட உற்பத்தி பற்றி, தளவாட உற்பத்தி மந்திரி மிஸ்டர் ஆலிவர் லிட்டில்டன் பார்லிமெண்டில் ஒரு அறிக்கை வெளியிட்டார்.

மார்ச்சு 9.—வேல்ஸில் 90,000 நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். இந்த வேலை நிறுத்தம் ஸ்காட்லாந்துக்கும் பரவி விட்டது.

1943-ம் வருஷம் முடிய அமெரிக்காவுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்ட குத்தகைக் கடன் தொகை 33 கோடியே 90 லட்சம் பவுன் என்று நிதி மந்திரி சர் ஜான் ஆண்டர்சன் அறிவித்தார்.

படை யெடுக்கும் சேனைகளை மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் பார்வையிட்டார்.

மார்ச்சு 14.—அமெரிக்க காங்கிரஸ் அங்கத்தினர்களை பிரிட்டனுக்கு வரும்படி அழைக்க வேண்டுமென்று பிரபுக்கள் சபையிலும், பொது மக்கள் சபையிலும் ஏக மனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

நிலக்கரிச் சுரங்கத் தொழிலைப்பற்றி ஒரு அறிக்கை வெளியிடுவது புத்திசாலித்தனமாகாது என்றும், வேல்ஸில் தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்குப் போய் விட்டார்களென்றும் மிஸ்டர் சர்ச்சில் காமன்ஸ் சபையில் கூறினார்.

அமெரிக்காவும் அட்லாண்டிக்கும்.

மார்ச்சு 9.—சென்ற 2 வருஷங்களை விட இனிமேல் நாட்டின் பொருளாதார நிலை குலையாமற் காப்பாற்றுவது கஷ்டமாயிருக்குமென்று எச்சரித்து, நேற்றிரவு, அமெரிக்க யுத்த உற்பத்தி போர்டு தலைவர் மிஸ்டர் டோனல்ட் நெல்சன் பேசினார்.

இந்தியா, பர்மா, இலங்கை.

மார்ச்சு 8.—கனடா நாட்டுப் பாதுகாப்பு டிபுடி மந்திரி மிஸ்டர் என். எல். டி. கார்ட்டாராட் இந்தியாவுக்கு வந்திருக்கிறார்.

இந்தியாவின் படை உத்தியோகத் தலைவராக லெப்டினென்ட் ஜெனரல் ஜே. ஆர். ஸ்வேய்ன் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

மார்ச்சு 10.—யுத்த மந்திராலோசனை சபை யங்கத்தினர்களாக எச். எச். காஷ்மீர் மகாராஜாவும் சர் பெரோஸ் கான் நூனும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

மார்ச்சு 11.—"ராம்பூர்" என்னும் இந்தியக் கப்பல் வெள்ளோட்டம் பார்க்கப்பட்டது.

டேராடூனிலுள்ள இராணுவப் பயிற்சி சாலையை மேன்மை தங்கிய சர் க்ளாட் ஆக்கின்லெக் பார்வையிட்டார்.

மார்ச்சு 13.—பூதிடாங்கை நேசநாட்டினர் கைப்பற்றினர்.

மார்ச்சு 14.—லார்ட் லூயி மௌண்ட்பேட்டன், ஜெனரல் ஸ்டில்வெல்லுடைய தலைமைக் காரியாலயத்திற்குப் போய், அவருடன் போர் முனையின் முன்னணிகளைப் பார்வையிட்டுத் திரும்பியதாகத் தெரிகிறது.

பர்மாவில் ஜப்பானியர் வசமிருந்த ரசபில் என்னும் ஜங்ஷனை நேசப் படைகள் கைப்பற்றிக்கொண்டன.

ரஷ்யாவும் பின்லாந்தும்.

மார்ச்சு 8.—செர்ன் - ஆஸ்ட்ரேப்பை சோவியத் படைகள் கைப்பற்றின.

சமாதான ஏற்பாடுகளைக் குறித்து பின்லாந்து ரஷ்யாவுக்கு அறிவித்து விட்டது.

மார்ச்சு 9.—புதிதாக மூன்றாவது உக்ரேனியப் போர்முனை ஆரம்பமாகி விட்டது. சோவியத் படைகள், நோவிபக, கசங்கா, ஸ்டாரோ கான்ஸ்டாண்டினோப் முதலிய 200 இடங்களையும் உலனோப், க்ரி[illegible]ப்கா, முதலிய 40 இடங்களையும் கைப்பற்றிக் கொண்டன.

மார்ச்சு 10.—உமான், க்ரிஸ்டினோப்கா, டால்மோயி, புகி, பங்கோப்கா, பாபங்கா, எகெடெரினோபோல், மௌஸ்டைரிஸ் முதலிய 300 இடங்களை ரஷ்யப் படைகள் கைப்பற்றின.

மார்ச்சு 11.—பேரிஷால், ஸ்லேடபோல், க்ராங்லோப், லேடிஷெங்கா முதலிய இடங்களை ரஷ்யர்கள் கைப்பற்றினர்.

மார்ச்சு 12.—ஸ்லாடபோல், நோவாமீர் கொராட், பெரிஸ்லால், கெய்பார்ன், ஷெப்செங்கோபோ, பால்ஸ்கயா, அலெக்ஸான்ட்ரோப்கா முதலிய இடங்களை ரஷ்யப் படைகள் கைப்பற்றின.

மார்ச்சு 13.—கெர்சானை ரஷ்யப் படைகள் கைப்பற்றின.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல் பகுதி.

மார்ச்சு 8.—விமானப் படை வைஸ் மார்ஷல் சர் ஜான் ஹெனிரிடி, அல்பியாக் மத்யதரைக் கடற் பகுதியில் தந்திர விமானப் படைத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

மார்ச்சு 9.—இத்தாலிய கப்பற் படையின் எதிர்கால நிலைமை பற்றி, மிஸ்டர் சர்ச்சில் பார்லிமெண்டில் ஒரு அறிக்கை வெளியிட்டார்.

மார்ச்சு 13.—படோக்லியோ அரசாங்கத்தை ரஷ்யா அங்கீகரித்து விட்டது.

விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரிகள் வயப்பட்ட நாடுகள்.

மார்ச்சு 8.—சமரசம் பற்றி போலாந்து ரஷ்யாவுக்கு அனுப்பிய குறிப்புகளுக்கு ரஷ்யா அளித்துள்ள பதில் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் மூலமாகப் போய்ச் சேர்ந்தது.

மார்ச்சு 11.—யூகோஸ்லாவிய மன்னர் பீட்டர் தன் முதன் மந்திரியோடும் உள்நாட்டு மந்திரியோடும் லண்டன் வந்து சேர்ந்தார்.

பிரிட்டனிலுள்ள ஆஸ்திரியர்கள் மீட்சி இயக்க மொன்றை ஆரம்பித்திருக்கிறார்கள்.

ரோமாபுரியைத் தாக்க வேண்டாமென்று கோரி, போப் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

நடு நிலைமை நாடுகள்.

மார்ச்சு 7.—டப்ளினிலுள்ள அச்சு நாடுகளின் ஸ்தானீகர் காரியாலயங்களை மூடிவிடவேண்டுமென்று அமெரிக்கா கோரியதற்கு அயர்லாந் இணங்க வில்லை.

மார்ச்சு 12.—அயர்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் போக்கு வரவுகள் நின்று விட்டன.

மார்ச்சு 14.—அயர்லாந்தைக் குறித்து காமன்ஸ் சபையில் மிஸ்டர் சர்ச்சில் ஒரு அறிக்கையை வெளியிட்டார்.

தூரக் கிழக்கு நாடுகள்.

மார்ச்சு 9.—பசிபிக்கிலும் தூரக்கிழக்கு நாடுகளிலும் மேலும் 16 ஜப்பானியக் கப்பல்களை அமெரிக்க நீர் மூழ்கிக் கப்பல்கள் அழித்து விட்டன வென்று அமெரிக்கக் கப்பற் படை இலாக்கா அறிவிக்கிறது.

மார்ச்சு 10.—மிஸ்டர் சர்ச்சிலைக் கண்டு பேசும் பொருட்டு, தான் லண்டனுக்குப் போவதாக ஆஸ்திரேலியப் பிரதம மந்திரி மிஸ்டர் ஜான் கர்ட்டின் கூறினார்.

மார்ச்சு 12.—அமெரிக்காவின் பசிபிக் கப்பற் படை, நியூகினியைச் சேர்ந்த ஹாலாண்டிக் பகுதியில் இரண்டு ஜப்பானிய சாமான் கப்பல்களை மூழ்கடித்து, ஒதோ அடோல் என்னும் ஒரு சிறு தீவுக் கூட்டத்தையும் கைப்பற்றினது.

மார்ச்சு 14.—அட்மிராலிடி தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த ஹாவெய், பட்ஜோல்லியோ ஆகிய தீவுகளில் நேச நாட்டுப் படைகள் போய் இறங்கிவிட்டன.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.